தென்றல்

விலை 16 புதியகாசுகள்

ஆசிரியர்: கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, தை 11 (24-1-'59). சனிக்கிழமை | இதழ் 32

திருக்குறளில் அரசியல்

அ. கி. பரந்தாமனார், எம். ஏ.

- 2 -

நாடு

அரசின் கூறுகளாகிய நாடு, அரசன், அமைச்சு, அரண், பொருள், படை, நட்பு என்னும் முறையில் ஒவ்வொன்ருக அறிவோம். முதலில் நாடு (Territory) என்பதை எடுத்துக்கொள்வோம். வள்ளுவர் முன்மாதிரியான இலட்சிய நாட்டையே குறிப்பிடுவதாகக்காண்கிறேம். தள்ளாவிளையுளும் தக்காரும் தாழ்விலாச் செல்வரும் சேர்வது நாடு. அது பொருளுடைமையால் பிறநாட்டாராலும் விரும்பத் தக்கதாயும், மிக்க பெயலின்மை எலி, விட்டில், கிளி, அரசண்மை இவற்ருல் கெடுதி இல்லாததாயும் இருக்கவேண்டும்.

அரசு-அண்மை — அரசண்மை. அரசண்மையாவது பகையரசர் நெருங்கி வந்து வருத்துதலாகும். பிறநாடுகள் பொறுத்த பாரம் எல்லாம் ஒருங்கே தன் கண் வருங்கால் அவற்றைத் தாங்கி அதன்மேல் தன் அரசனுக்குப் பொருள் முழுவதும் உடன்பட்டுக் கொடுக்கக்கூடியதாகவும் இருக்க வேண்டும்; உறுபசியும் ஓவாப்பிணியும் செறுபகையும் சேராதிருக்க வேண்டும்; சாதி பற்றியும் சமயம் பற்றியுமுள்ள பல்குழுவும், வழிப்பறி செய்வோர், கள்வர், கோள் சொல்வோர், இச்சகம் பேசிப் பொருள் பறிப்போர், பொய்ச்சாட்சி கூறுவோர் முதலிய பாழ்செய்யும் உட்பகையும், வேந்தனை வருத்தும் சிறுமைக்குணமுடைய குறும்பரும் இல்லாதிருக்க வேண்டும். துரவு, கேணி, ஏரி முதலிய கீழ்நீரும், மேலிருந்து கிடைக்கும் மழைநீரும், மலையினின்று ஓடிவரும் ஆற்றுநீரும், வல்லரணும் நாட்டிற்கு உறுப்பாகும். பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், காவல் இவை நாட்டிற்கு அணியாகும். குடிகள் வேந்தன் பாலும் வேந்தன் குடிகள் மேலும் அன்புள்ளவர்களாக இருக்க வேண்டும். மக்களுக்கு அரச பக்தியும் மன்னனுக்குக் குடிமக்கட் பக்தியும் வேண்டும். இப்படியிருக்க வேண்டும் நாடு.

அரசன்

அரசன் உலகிற்கு உயிர் போன்றவன். ஆதலால், அரசனுக்கு அஞ்சாமை, ஈகை, கல்வி, அறிவு, ஊக்கம், எதனையும் விரைவில் செய்து முடிக்கும் பண்புடைமை, துணிந்து செய்யும் ஆண்மை, அறன் இழுக்காத ஒழுக்கம், மறன் இழுக்கா மானம் ஆகிய இவை இருக்க வேண்டும். மேலும் அவன் பொருளை உண்டாக்கவும், வந்த பொருளைச் சேர்த்து வைக்கவும், சேர்த்த பொருளைக் காக்கவும், காத்த பொருளை அறம் பொருள் இன்பம் இவற்றின் பொருட்டுச் செலவிடவும் வல்லவனாக இருக்க வேண்டும். வீரர்களுக்குச் சம்பளம் கொடுத்தல் முதலியன பொருள் பொருட்டாகும். மண்டபம் கட்டுதல், சோலை அமைத்தல், நீர் நிலை அமைத்தல் இவற்றிற்குச் செலவு செய்தல் இன்பப் பொருட்டாகும். கோயில்களுக்கும் வறியவர்களுக்கும் அந்தணர்க்கும் பொருள் கொடுத்துதவுதலை அறப் பொருட்டாகும் என்பர். அரசன் காட்சிக்கு எளியவனாகவும், கடுஞ் சொல்லன் அல்லனாகவும், நீதி முறை செலுத்துபவனாகவும், செவி கைப்பக் கூறுவதைப் பொறுக்கும் பண்புடையவனாகவும், குடியோம்பலில்வல்லனாகவும் இருக்க வேண்டும். செவியறிவுறுத்தல் என்னும் துறையே புறப்பொருளில் உண்டு. அறிஞர்கள் அறிவுரை கூறிய பாடல்கள் புறநானூற்றில் இருக்கின்றன. இதனால், சங்க கால முடியாட்சியில் ஓரளவு பேச்சுரிமை (Freedom of Speech) இருந்ததாக அறியலாம். அரசன் பேரறிஞர் துணைகொள்ள வேண்டும்; அளவு கடந்த மகிழ்ச்சியில் ஆழ்ந்துவிடக்கூடாது; லோபியாகவும் இருத்தல் கூடாது. தகுதியறிந்து அன்பளிப்புச் செய்ய வேண்டும். மிகுதியாக விரும்பும் பொருளைப் பிறருக்குத் தெரியாது நுகர வேண்டும். அவ்விருப்பத்தை வெளியில் யார்க்கும் தெரிவித்தல் ஆகாது. கடுமையாகத் தண்டிப்பது போல் காட்டிக் கருணை யுள்ளத்தோடு தண்டனை கொடுக்க வேண்டும். ஆனால், தீக்கொளுவுவார், நஞ்சிடுவார், கொலை செய்வார், கள்வர், ஆறலைப்பார், கொள்ளையடிப்போர் முதலிய கொலையிற் கொடியாரைக் கொல்வதில் கருணை காட்டுதல் கூடவே கூடாது. எதையும் எண்ணிச் செய்ய வேண்டும். ஆராய்ச்சி செய்து அமைச்சர் முதலியவர்களை அமர்த்த வேண்டும்.

மறைத்துறை (C. I. D.)- இத்துறைக்கு பொறுப்பானவன் அரசனே. ஒற்று அரசனுக்குக் கண் போன்றது. பகை, நொதுமல், நட்பு என்னும் முத்திறத்தாரையும் மன்னன் ஒற்றரால் அறிய வேண்டும். எங்கிருந்து சதி ஏற்படுமோ என்று யார் அறிவார்? ஓர் ஒற்றன் கண்டதை மற்றோர் ஒற்றனுல் காண வேண்டும். இவர்கள் சொன்னது உண்மையா என்று இன்னோர் ஒற்றனுல் அறிய வேண்டும். மூவரும் சொன்னவை ஒன்ருக இருக்குமானுல் அரசன் முடிவுக்கு வர வேண்டும். மூன்று ஒற்றர்களும் ஒருவருக்கொருவர் தெரியாமல் வேலை செய்ய வேண்டும். "ஒற்று ஒற்றித் தந்த பொருளை மற்றோர் ஒற்றினுல் ஒற்றிக் கொளல்" என்றும், "ஒற்று ஒற்று உணராமை ஆள்க; உடன்மூவர் சொல்தொக்க தேறப் படும்" என்றும் வள்ளுவர் கூறுவதனுல் இவ்வுண்மை புலனுகும். அரசன் ஒற்றனைப் பாராட்ட வேண்டுமெனினும் அவனுக்கு அன்பளிப்புக் கொடுக்க வேண்டுமெனினும், பிறர் அறியாமல் செய்ய வேண்டும் என்று திருக்குறள் வற்புறுத்துகிறது.

அமைச்சன்

வள்ளுவர் கூறும் அமைச்சனுக்கு இக்காலத்தைப்போலவே பொறுப்பு அதிகமாகவே இருக்கிறது. அமைச்சன் அரசனைவிட அறிவுள்ளவனாகவும் திறமைமிக்கவனாகவும் பேச்சில் வல்லவனாகவும் நேர்மையுடையவனாகவும் இருக்கவேண்டும் என்று திருக்குறள் கூறுகிறது. பரிமேலழகர், "காவற்சாகாடு உகைத்தற்கண் அவ்வரசற்கு இணையாய அமைச்சனது இயல்பு பத்து அதிகாரத்தால் கூறுவான் தொடங்கி முதற்கண் அமைச்சுக் கூறுகின்றார்" என்று அங்க இயலை விளக்குகையில் கூறுவதனுல், அரசனுக்கு இணையான நிலை அமைச்சனுக்கு உண்டு என அறியலாம். அமைச்சன் படை, பொருள், காலம், செய்கை, செய்யும் அருவினை, வாய்ப்ப எண்ணும் திறன் இவற்றுடன் தொழிலாற்றுவதில் அசைவில்லாமை, குடிகாத்தல், நீதி நூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதல், முயற்சி ஆகிய இவையும் உடையவனாக இருக்கவேண்டும்; அரசியல் தந்திரமும் தெரிய வேண்டும்; இதுவே செய்யத்தக்கதுஎன்று துணிவு பிறக்கும் வகை சொல்லும் திறனும் வேண்டும்; கல்வியறிவும் மதிநுட்பமும் வேண்டும்; செயற்கை அறிந்தக் கடைத்தும் உலகத்து இயற்கை அறிந்து செய்யத் தெரிய வேண்டும். அரசன் தன்னை அவமதித்த விடத்தும் அரசனுக்கு நன்மை பயக்கக்கூடியதைச் சொல்லியாக வேண்டும். அரசவையில் தான் சொல்வதைச் சுருக்கமாகவும் தெளிவாகவும் மற்ற உறுப்பினர்கள் ஏற்றுக்கொள்ளுமாறும் யாராவது ஓர் உறுப்பினர் தடை கூறினுல் தக்க விடையளித்து ஒப்புக்கொள்ளுமாறும் பேசும் வன்மையுடையனுய் இருக்கவேண்டும்; பிறர் சொல்வதைக் கேட்டு அதில் உள்ள நன்மையை ஏற்றுக்கொள்ள வேண்டும். முதலையும் மூர்க்கனும் கொண்டது விடா என்னும் முறையில் பிடிவாதமாக இருக்கக்கூடாது. அமைச்சன் செயல்களில் எல்லாம் அறமுறையிலிருந்து வழுவுதல் கூடாது. "ஈன்ருள் பசிகாண்பானுயினும் செய்யற்க சான்றோர் பழிக்கும் வினை" என்ருர் வள்ளுவர். இதற்கு விள்க்கவுரை கூறிய பரிமேலழகர், "இறந்த மூப்பினராய இருமுது குரவரும் கற்புடை மனைவியும் குழவியும் பசியான் வருந்தும் எல்லைக்கண் தீயன பலவும் செய்தாயினும் புறந்தருக என்னும் அறநூற் பொது விதி (தரும சாஸ்திர விதி) பொருள் நூல் வழி ஒழுகுதலும் அரசர் தொழிற்குரியராதலும் நன்கு மதிக்கற்பாடுமுடைய அமைச்சர்க்கு எய்தாமை பற்றி இவ்வாறு கூறினர்" என்ருர். 'புகமொடு நன்றி பயவாவினை ஒருவுதல் வேண்டும்' என்றும், 'இடுக்கட்படினும் இளி வந்த செய்யார்' என்றும், 'பழிமலைந்து எய்திய ஆக்கத்திற் சான்றோர் கழி நல்குரவே தலை' என்றும், 'அழக் கொண்ட எல்லாம் அழப்போம்' என்றும் வள்ளுவர் மேலும்

— 7-ம் பக்கம் —

டாங்கே எங்கே?

ஒரு விளக்கம்

திராவிட முன்னேற்றக் கழகத்தவரிடம் சிக்கிக்கொண்ட கம்யூனிஸ்டுகள் சுலபத்தில் இந்தப் பிடியிலேயிருந்து தங்களை விடுவித்துக் கொள்ளமாட்டார்கள் என்பதற்கு "டாங்கே எங்கே?" என்ற கட்டுரையும் அதன் பிறகு தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்டுகளுக்காக கூறப்பட்ட விளக்கவுரையும் எடுத்துக்காட்டாக உள்ளன. டாங்கே மாதம் ஒன்றுக்குக் கூலியாக-சம்பளமாக-அலவன்சாக ரூபாய் ஐயாயிரம் பெற்றுக்கொள்கிறார் என்ற சேதியினைக் கேட்ட நாளிலிருந்து கம்யூனிஸ்ட் வட்டாரம் மிக மிகக் கலங்கிப் போயிருக்கிறது என்பது தெரியவும், தமிழகத்தின் பல பகுதிகளிலேயுள்ளவர்களும் தெரிந்து கொள்ளும் வகையில் எழுதிக்காட்டவும் நேர்ந்தமைக்கு உண்மையில் வருந்துகிறேன். அவர்களுக்காக அனுதாபப்படுகிறேன். டாங்கே விசயத்திற்கு விளக்கம் தந்தபின் கம்யூனிஸ்ட்கள் இந்தப் பிரச்சினையில் இருக்கும் உண்மையை உணர்ந்து ஒதுங்கிப் போயிருப்பார்களானால் அவர்களுடைய நிலை மீண்டும் பரிதாபத்துக்குரியதாக மாறியிருக்காது. டாங்கே பற்றிய சோக வரலாறு 'கரண்ட்' இதழில் வெளிவந்த செய்திகளின் அடிப்படையில் உருவானதென்று சொன்னோம். உடனே கம்யூனிஸ்டுகள் ரூ. 5000 பெற்றுக்கொள்வதை நேரடியாக மறுக்காமல், அந்தப் பத்திரிகை (கரண்ட்) அமெரிக்கக் கைக்கூலியென்று அவர்களுக்கே உரியபாணியில் தெரிவித்தார்கள்! ஏனெனில் புல்கானினை — தங்களின் மாஜிக் கடவுளைக்கூட எதிரிகளின் கையாளென்று எட்டி உதைத்தவர்கள் தானே. 'கரண்ட்' இதழ் எப்படி அவர்களிடத்திலே பாராட்டுதலைப் பெறமுடியும்! "கேரளத்தில் அமைச்சர்களாயிருக்கும் கம்யூனிஸ்டுகளே சம்பளத்தைக் குறைத்துக்கொண்டிருக்கும்போது டாங்கே எப்படி ரூ. 5000 வாங்கமுடியும் - கட்சி எப்படி அனுமதிக்கும்? 'தென்றல்' சொல்வது பொய் - 'கரண்ட்' ஆதாரம் கவனிக்கத்தக்கதல்ல"-இப்படியும் சில கம்யூனிஸ்டுகள் சொல்லியுள்ளார்கள். இன்னும் எத்தனையோ வேடிக்கையான சமாதானங்கள்! துயரப்படும் கம்யூனிஸ்டுகளின் துன்பக்கதையைக் கேளுங்கள்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தவர் பொதுமக்களின் நலனுக்கு உழைக்காதவர்கள். கம்யூனிஸ்டுகள்தான் இரவு பகல் தியாகம் செய்பவர்கள் - எங்களைப் பொய் சொல்லித் தூற்றுகிறார்கள்" என்றெல்லாம் வேதனைப்பட்டுக் கொண்ட கம்யூனிஸ்டுகள் 6-11-58-ம் நாளன்று மதுரை திலகர் திடலில் நடைபெற்ற "12 அணாவுக்கு ஒரு படி அரிசி-கண்டன நாள் பொதுக்கூட்டத்தில்" பின்வரும் கேள்வியைக் கொடுத்தார்களாம்! என்ன அந்தக் கேள்வி? "டாங்கே ரூ 5000 உபகாரச் சம்பளம் பெறுவதாக 'தென்றல்' பத்திரிகையில் வந்திருக்கிறது. இது உண்மையா?" என்பதுதான். இதனைக் கேட்ட **தோழர் திருவேங்கடம் என்பவர் உண்மையைத் தெரிந்து கொள்வதற்காக— தன்னைப் போன்ற ஒரு சாதாரண கம்யூனிஸ்ட் நண்பனிடமல்ல - அண்டர்கிரவுண்டில் பதுங்கிக் கொண்டு போலீசாருக்கு 'டிமிக்கி' கொடுப்பதில் இணையற்றவரென்று பாராட்டப்படுகின்ற பிரபல தலைவர் பி. ராமமூர்த்தியிடம் தன் கேள்வியை அனுப்பினாராம்! ஆனால் அவர் அதற்குப் பதில் சொல்லாமல் உட்கார்ந்துவிடவே,** உணர்ச்சியால் உந்தப்பட்டு கம்யூனிஸ்ட் பஞ்சாலைச் சங்கத்தைச் சேர்ந்த வி. கார்மேகம் என்ற தலைவரிடம் நினைவூட்டிக் கேட்டபின் கார்மேகம் கேள்வியைவாங்கிப்பார்த்துவிட்டுச் சொன்னாராம்: **"இருக்காது இருக்காது-இப்படியும் இருக்குமானால் ஆட்சி நம்முடைய கையிலல்லவா இருக்கும்" என்று, உண்மைக் கதிரவனை மறைக்க முயற்பல் என்ற கார்மேகத்தைப் பயன்படுத்தியிருக்கிறார்!** அதன் பிறகு மேலும் இரண்டு நாட்கள் கழித்து இந்தக் கம்யூனிஸ்டுகள், 'ஜனசக்தி' நிருபரான எம். என். ஆதிநாராயணன் என்பவரைச் சந்தித்து, டாங்கே விசயத்தைச் சொல்லி, கட்சி விட்டு விலகுதல், தவறினால் மொட்டையடித்துக் கொள்ளுதல் போன்ற நிபந்தனைகளையும் கூறி சமாதானம் கேட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குக் கிடைத்த பதில் வசைமொழிகள். **"நீங்கள் என்ன சூதாட்டம் விளையாடுகிறீர்களா-உங்களுக்கு டாங்கே மீதும் கம்யூனிஸ்ட் கட்சி மீதும் நம்பிக்கை இருக்கிறதா இல்லையா?"** என்று கேட்டாராம்! உடனே இந்த அப்பாவித் தோழர்கள் 'உண்டு உண்டு' என்று தலையை அசைத்தார்களாம் - பின் ஏன் பந்தயம் கட்டுகிறீர்கள் என்று தன்னுடைய ஆவேசத்தை அள்ளித் தெளித்திருக்கிறார். **"சரிசரி நீங்கள் போய் வாருங்கள் நான் மேலிடத்திற்கு எழுதிக் கேட்கிறேன்"** என்று கூறி அனுப்பிவிட்டாராம்? தலைகவிழ்ந்து வந்த கம்யூனிஸ்டுகள் பேசாமடந்தைகளாகிவிட்டு கழகத் தோழர்களைக் காணவும் வெட்கப்பட்டுக்கொண்டார்கள்! இருந்தாலும் உண்மையைக் காண வேண்டுமென்ற அவர்களின் உறுதி குலையவில்லை-மீண்டும் டிசம்பர் 16 அல்லது 17-ம்தேதி இரவு 10 மணிக்கு நடைபெற்ற பாலு நினைவுப் படிப்பக நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திலும் நகர் கமிட்டிச் செயலாளர் ஏ. பி. பழனிச்சாமி என்பவரிடம் டாங்கே சம்பள விசயத்தைக் கூறியவுடன், அவர் "நான் தென்றலைப் படித்துப் பார்க்கவேண்டும்" என்று கேட்க, தோழர்கள் கொடுத்திருக்கிறார்கள். படித்துப் பார்த்தபின் அவர் சொன்னாராம் **"டாங்கே மாஸ்கோ சென்றிருந்தது உண்மை; ஆனால் மாதா மாதம் உபகாரச் சம்பளமாக ஐயாயிரம் பெறுகிறார் என்றிருப்பது கிடையாது. ஒருவேளை மாஸ்கோ செல்லும்போது சிலவிற்குக் கடனாக 5000 ரூபாய் வாங்கியிருக்கலாம்; அதை இப்படித் 'தென்றல்' திரித்து எழுதியிருக்கிறது; எதற்கும் இந்தத் 'தென்றல்' இதழை நான் கொண்டு போகிறேன். அகில இந்தியத் தொழிற் சங்க காங்கிரஸ் கமிட்டிக்கு எழுதிக் கேட்கிறேன்"** என்று! உடனே சபதம் மேற்கொண்ட தோழர்கள் 'பதில் வரட்டும்; தென்றலை என்ன செய்கிறோம் பாருங்கள்' என்று மீண்டும் கொஞ்சம் நெஞ்சுயர்த்திப் பேசியிருக்கிறார்கள்! பாபம் அவர்கள் 12-12-58 தேதியில் பாலு படிப்பக ரப்பர் முத்திரையுடன் ஒரு 'ரிப்ளை கார்டு' பம்பாய் அகில இந்தியத் தொழிற் சங்க காரியதரிசிக்கு அனுப்பி இன்று வரையிலும் எந்தவிதமான மறுமொழியும் கிடைக்காததினால் மயக்கமுற்று இருக்கிறார்களாம்! தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட் தலைவர்கள் தொண்டர்களின் வினவுக்கு விடை தரப்போவது என்றோ?

பல கம்யூனிஸ்ட் தோழர்கள் தங்களுடைய தலைவர்களிடத்திலேயிருந்து சரியான தகவலும் ஆதாரத்துடன் கூறத்தக்க மறுமொழியும் கிடைக்காத காரணத்தால் அவர்கள் உள்ளத்து வேதனையை ஆத்திரமாக்கி, கழகத் தோழர்களிடத்திலே, குறிப்பாக சாமி படிப்பக உறுப்பினர் ஜெபக்கனி என்பவரிடத்திலே உடல்வலிவைக் காட்ட முனைந்தனராம்! மீண்டும் தென்றலில் விளக்கவுரை வெளிவந்த பின்னால் 21-12-58 ல் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சி நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்திற்கு வந்திருந்த நகரத்துச் செயலாளர், தென்றலைப் படித்துவிட்டு இதில் உண்மையும் இருக்கிறது; தவறும் இருக்கிறது என்றாரே தவிர, உண்மை எது தவறு எது என்பதை எடுத்துக் கூறவில்லை. முடியவில்லை அவரால்! சவால் விட்டுச் சங்கடப்பட்டுக் கொண்ட பாலு படிப்பகச் செயலாளரிடம் மிகவும் ஆத்திரத்துடன் **"நீங்கள் ஏன் வம்பையெல்லாம் விலைக்கு வாங்குகிறீர்கள். வரப்போகும் முனிசிபல் தேர்தலில் கூட்டு முன்னணி அமைத்து காங்கிரசை முறியடிக்க வேண்டும் என்று திட்டம் போட்டிருக்கிறோம். நீங்கள் பகையை வளர்க்கிறீர்களே. நான் அகில இந்தியத் தொழிற் சங்கத்திற்கு கடிதம் எழுதியிருக்கிறேன். பதில் வரும் வரை எவரும் இதைப் பற்றிப் பேசக் கூடா"தென்று ஆணை**யிட்டாராம். சம்பளத்தலைவர்களின் சரித்திரம் தெரிந்துகொள்ளாத சாதாரணக் கம்யூனிஸ்டுகள் பம்பாயிலிருந்து பதில் வரும் நன்னாளை எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். 'ஜனசக்தி' ஆசிரியருக்கு நீண்ட கடிதமும் எழுதி, தென்றல் கட்டுரைகளையும் இணைத்து அனுப்பியிருக்கிறார்கள். பங்கப்பட்டுப்போன கம்யூனிஸ்டுகள்-ரூபாய் 5000 பற்றிய மறுப்புச் செய்தியைக் கேட்காமல் கலங்குகிறார்கள்! அவர்களின் கண்ணீரைத் துடைக்க முன்வராத கம்யூனிஸ்ட் தலைவர்கள் தான் கழகத்தவரின் கண்ணியச் சொற்களையெல்லாம் களங்கப்படுத்திப் பேசுகிறார்கள்!

திராவிட முன்னேற்றக் கழகத்தவர் இந்தச் செய்திகளையெல்லாம் தமிழகத்தின் ஏனைய பகுதி கம்யூனிஸ்டுகளுக்குத் தெரிவிக்கும் காரணம், உங்கள் கட்சித் தலைவர்களை தயவுசெய்து இனியேனும் நீங்கள் புரிந்து தெரிந்துகொள்ள வேண்டும் என்பதுதான்! மதுரை மாவட்டத்துக் கம்யூனிஸ்டுகளின் - அவர்களின் நிரந்தரத் தலைவர்களின் நிலையையும் நினைப்பையும் நிதானமற்ற பதிலுரைகளையும் காணுங்கள்! 28-12-58 அன்று மதுரை நகர் கோரிப்பாளையம் பகுதியில் நடைபெற்ற கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக்கூட்டத்தில் மாஜி சட்டசபை உறுப்பினர் மதனகோபால் என்பவர் கழகத்தின்மீது கடுமையான வசைமொழிகளைத் தந்து கொண்டிருந்தார். இடையிலே ஒருவர் ஒரு கேள்வித்தாளைக் கொடுத்தார். "டாங்கே ரூ. 5000 பெற்றுக்கொள்வதாக தென்றலில் செய்தி வந்துள்ளதே அது உண்மையா?" என்று படித்துக் காட்டினார். உண்டு அல்லது உண்மையல்ல என்று பதில் கூறியிருக்கலாம் டண்புள்ளவரென்றால்! ஆனால், அவர் பேசியது தென்றலில் இடம்பெறக் கூடாதென்றாலும், தகாதது என்ற என் இதயம் சொன்னாலும், குறிப்பிடுகிறேன்: "கம்யூனிஸ்ட் கட்சியின் மீது தென்றல் கூறும் குற்றச்சாட்டு, குலமகளைப் பார்த்து விலைமகள் கூறுவதைப்போல இருக்கிறது. நண்பர்களே எவரும் நம்பாதீர்கள்." இதுதான் கேள்விக்கு பதிலா? உண்மையில் விலைமகளாக இருப்பது எந்தக் கட்சி? பார்வர்டுபிளாக் கட்சிக்கு இரவலானது எந்தக் கட்சி? ஜனநாயக காங்கிரசிற்கு இரையானது எந்தக் கட்சி? தமிழரசுக் கழகத்துடன் கூட்டுமேடை போட்டு, கட்டபொம்மனைப் பாராட்டியது எந்தக் கட்சி? திராவிடர் கழகத்தின் கால்பிடித்து வாழ்ந்தது எந்தக் கட்சி? காங்கிரசுடன் உதகைக்குப் போவது எந்தக் கட்சி? ஒரே விடை - விலைமகளும் விரும்பத்தகாத கம்யூனிஸ்ட் கட்சி!

அன்றைக்குமறுநாள் (29-12-58) நடைபெறவிருந்த மாகாளிபட்டி

— 7-ம் பக்கம் —

பொதுவுடைமை பற்றிய வினு-விடை

அடுத்து வரும் "தென்றல்" இதழிலிருந்து, தோழர் கூடலரசன் அவர்கள், "தென்றல்" நண்பர்கள் விடுக்கும் பொதுவுடைமை பற்றிய வினுக்களுக்கு விடையளிப்பார். அவ்வப்போது தமக்கு ஏற்படும் ஐயங்களை நண்பர்கள் ஒவ்வொரு வாரமும் சனிக்கிழமைக்குள் கிடைக்கும்படி அனுப்பிவைக்கவேண்டும். கடிதத்தில் வினு-விடைப் பகுதி என்று குறிப்பிட வேண்டும்.

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

எண்ணம்

மலர் 5 | 24—1—59 | இதழ் 32

ஆகாஷ்வாணியும் ம. பொ. சி.யும்.

இந்தியத் துணைக்கண்டத்து ஆட்சிப் பொறுப்பைக் காங்கிரஸ் கைப்பற்றிக் கொண்டது முதல், எல்லாத் துறைகளையும் இந்தி மயமாக்கும் வேலை துரிதமாக நடைபெற்று வருகிறது. அந்த வேலையின் தொடர் நிகழ்ச்சிகளாக புகைவண்டி, அஞ்சல் நிலையப் பெயர்ப்பலகைகளில் இந்திக்கு முதலிடம் அளிக்கப்பட்டது. அஞ்சல் அட்டைகள், மணிஆர்டர் பாரங்கள் முதலியவை இந்தியில் அச்சிடப்பட்டன. புதிய முறையைப் புகுத்துகிறோம் என்ற பெயரில் அனைத்திந்தியாவிலும் 'நயா பைசா' என்ற பெயரில் இந்திச் சொல் கையாளப்பட நாணயத்துறையில் வழி வகுக்கப்பட்டது. இதே முறையிலேயே அனைத்திந்திய வானொலியையும் 'ஆகாஷ்வாணி' என்று அழைக்கத் தொடங்கி, அங்கும் இந்தி மயமாக்கும் வேலையைத் தீவிரப்படுத்தினர் ஆட்சியாளர்.

புகைவண்டி நிலையப் பெயர்ப்பலகையில் இந்திக்கு அளிக்கப்பட்டிருந்த முதலிடத்தையும், அஞ்சல் துறையில் அதற்குத் தரப்படும் முக்கியத்துவத்தையும் எதிர்த்ததுபோலவே, இன்றைய 'ஆகாஷ்வாணி'யின்மூலம் உள்நுழையும் வேற்றுமொழிச் சொல்லையும் எதிர்க்கின்றனர் தமிழர்.

பொதுவாக, ஒரு நாடு விடுதலைபெற்றுவிட்டது என்று கொள்ளப்பட்டால், அதுவரை அமுக்கப்பட்டுவந்த அதன் சொந்த மொழி உயர்த்தப்படுவதும், அதுவரை இருந்துவந்த அன்னிய மொழி அகற்றப்படுவதும் வழக்கம். அந்த முறையில் விடுதலை பெற்றுவிட்டதாகச் சொல்லப்பட்ட இந்தியத் துணைக்கண்டத்திலும் மொழித்துறையில் பல மாற்றங்கள் செய்து காட்டப்பட்டன. ஆனால், செய்து காட்டப்பட்ட அந்த மாற்றங்கள் எவையும், உண்மையில் அதுவரை அமுக்கப்பட்டு வந்த எந்த மொழிக்கும் ஆக்கம் தராமல், புதிதாகப் பொதுமொழி என்ற போர்வையில் குறிப்பிட்ட ஒரு மொழியே கொலுவீற்றிருக்கச் செய்யப்படும் புதிய ஏகாதிபத்திய முறையையே — இந்திய ஆட்சியாளரின் இந்தி நுழைப்பையே எடுத்துக் காட்டியது.

இந்த மொத்த இந்தி நுழைப்பை எதிர்க்கும் ஒரு பகுதியாகவே, புதிதாக அண்மையில் கையாளப்படும் 'ஆகாஷ்வாணி' என்ற சொல் அகற்றப்பட்டு, 'வானொலி' என்ற தமிழ்ச்சொல் வழங்கப்படவேண்டும் என்ற கிளர்ச்சி எழுந்துள்ளது.

கிளர்ச்சியை நடத்துகிறவர்களும், ஆதரிப்பவர்களும் ஒரே கொள்கையை எல்லாப் பிரச்னைகளிலும் உடையவர்கள் அல்லர். வெவ்வேறு பிரச்னைகளில் தனித்தனிக் கருத்துடையவர்கள் அவர்கள். எனினும், 'ஆகாஷ்வாணி' அகற்றப்பட்டு, 'வானொலி' வழங்கப்படவேண்டும் என்பதில் அவர்கள் ஒரே கருத்து உடையவர்களாக உள்ளனர். அதற்கான உண்மையான காரணம், எழுப்பப்படும் கோரிக்கையிலுள்ள மறுக்கமுடியாத நியாயமேயாகும். தங்களுடைய நாட்டுக்கு விடுதலை வந்துவிட்டதாகக் கேள்விப்படும் யார்தான், அந்த நாட்டின் அரியணையில் தங்கள் அன்னைமொழி அமரக் கூடாது என்று நினைப்பார்கள்! அதிலும், இந்தக் கோரிக்கையின் இன்னொரு நியாய பூர்வமான விஷயம், இந்த 'வானொலி' என்ற சொல், அந்த மொழிப் பகுதியிலுள்ள நிலையங்களில் மட்டும் கையாளப்பட்டால் போதும் என்பதாகும். அவர்கள் அந்தச்சொல் அனைத்திந்தியாவிலும் உள்ள எல்லா நிலையங்களிலும் கையாளப்படவேண்டும் என்ற ஆதிபத்திய எண்ணத்தோடு அந்தக் கிளர்ச்சியை நடத்தவில்லை.

இந்த நிலையில், இந்தப் பிரச்னையின் முக்கியத்துவத்தை உணர்ந்துகொண்ட மொழிப்பற்றுள்ள எவரும், 'வானொலி' வழங்கப்படவேண்டும் எனும் கோரிக்கையை ஆதரிக்காமலிருக்கமாட்டார்கள். ஆனால், அனைத்திந்திய அரசும், அதற்குக் கட்டுப்பட்டுள்ள சென்னை அரசும் வழக்கம்போல் இந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொள்ள மறுத்தபடியே உள்ளன. மொத்தத்தில் எந்தப் பிரச்னைக்கும் நல்லது, கெட்டது என்ற இரண்டு உள்ளதுபோல், இதிலேயும் 'வானொலி' வேண்டும் எனும் மொழியுணர்ச்சியாளர்களும், 'ஆகாஷ்வாணி'யே என ஆர்ப்பரிக்கும் ஆட்சியாளர்களுமாக இரண்டு கட்சிகளே உள்ளன. ஆனால் இப்போது திடீரென்று இந்த இரண்டிலும் புகுந்து 'கிளித்தட்டு' ஆடும் புதியதொரு கட்சியை அறிமுகப்படுத்தும் திருப்பணியில் திரு. ம. பொ. சி. ஈடுபட்டிருப்பது தெரிய வருகிறது. அந்தப் பரிதாபத்திற்குரிய இடத்தில் அவருடைய தமிழரசுக் கழகத்தை அவர் கொண்டு வந்து நிறுத்தியிருக்கிறார்.

'ஆகாஷ்வாணி'க்குப் பதில் 'வானொலி' என்ற கோரிக்கையின் அப்பட்டமான உண்மையைத் தெளிவாக உணர்ந்தும், அவர் பிரச்னையைக் குழப்பிக் காட்டுவது அவருடையவும் அவருடைய கட்சியினுடையவும் பரிதாபமான நிலையைப் படம் பிடித்துக் காட்டுகிறது. உண்மையில் இந்தக் கிளர்ச்சியில் அவருடைய, அவரைப் பின்பற்றுவோருடைய நிலை என்ன என்பதையே அவரால் தெளிவுபடுத்த முடியவில்லை; இல்லாத விஷயத்தை இருப்பதாகக் கற்பனை செய்துகொண்டு, என்னென்னவோ கூறுகிறார் அவர்.

"'ஆகாஷ்வாணி' வேண்டாம் என்போர், 'ஆல் இண்டியா ரேடியோ' என்று அழைக்கப்பட வேண்டும் என்பவர்களே" என்கிறார் அவர். அவருடைய இந்தக் கருத்தைக் காணும்போதுதான் நமக்கு அவர்மீது அனுதாபம் ஏற்படுகிறது. கேட்பவர்கள் 'ஆல் இண்டியா ரேடியோ' வேண்டும் என்று கூறவில்லை, 'வானொலி'யே வேண்டும் என்கிறார்கள் என்பதைச் சாதாரணமானவர்களும் புரிந்து கொண்டுள்ளார்கள். எனினும் ஒரு கட்சியின் தலைவரான ம. பொ. சி.யோ அதனைப் புரிந்துகொள்ளாமல், அல்லது புரிந்து கொண்டும் வேண்டுமென்றே, விசித்திரமான கருத்தை வெளியிடுகிறார்.

இதோடு, 'ஆகாஷ்வாணி' என்ற சொல், வட சொல்லல்ல; கன்னடச் சொல் என்று விவரம் புரியாமல் குறிப்பிட்டுவிட்ட அமைச்சரின் கருத்தை ஆதரிக்கிற முறையிலும் அவர் எழுதியிருப்பது நமக்கு இன்னும் வேடிக்கையாகப் படுகிறது.

தான், அல்லது தன்னுடைய கட்சியாளர்கள் சொல்லவில்லை, அல்லது செய்யவில்லை என்பதற்காக, தெள்ளத் தெளிவாகத் தெரியும் உண்மைகூட எவ்விதம் மாற்றிக் கூறப்படுகிறது என்பதற்கு திரு. ம. பொ. சி. சிறந்த உதாரணமாக விளங்குகிறார்.

ஆனால் மொத்தத்தில் இந்தப் பிரச்னையில் திரு. ம. பொ. சி. தனது உண்மையான எஜமான விசுவாசத்தை வெளியிட்டுவிட்டார் என்பதில் நாம் திருப்திப்பட வேண்டும். அவருடைய கருத்துப்படி, கிளர்ச்சி செய்வோர் 'ஆகாஷ்வாணி'யை விட்டுவிட்டு, 'ஆல் இண்டிய ரேடியோ' வேண்டும் என்பவர்களாக இருந்தாலும் இல்லாவிட்டாலும், அவர் 'ஆகாஷ் வாணியை' ஆதரிக்கிறவர் என்பது தெளிவாகிறது.

இல்லாவிட்டால், 'வானொலி' வேண்டும் என்று காரணம் காட்டி பலர் வானொலி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்ளாமல் புறக்கணிக்கும்போது அவருடைய கட்சிப் பிரமுகர் 'ஆகாஷ் வாணி'யை ஏற்றுக்கொண்டு அந்நிகழ்ச்சியில் கலந்துகொள்வதை ம. பொ. சி. பார்த்துக் கொண்டிருப்பாரா, என்ன?

வரிசையாக திரு. ம. பொ. சி.யையும், அவருடைய கட்சியையும் புரிந்து கொண்டுள்ள தமிழ் மக்கள், இனியும் அவர்களை நம்பமாட்டார்கள் என்பதை நம்மால் எடுத்துக் காட்டாமலிருக்க முடியவில்லை.

தமிழர்களின் பெயரால் கட்சி நடத்தும் திரு. ம. பொ. சி. இனியாவது, வானொலிப் பிரச்னைபோன்றவற்றில் தலையிட்டு டில்லியை எதிர்த்துக்கொண்டால், நேருபோன்றோரிடம் தனக்குள்ள கடிதத் தொடர்பு நின்றுவிடக் கூடாதே எனும் எண்ணத்தை மாற்றி உண்மையான தமிழ், தமிழர், தமிழகத் தொண்டாற்ற முன் வருவாரா?

காலம்தான் பதில் சொல்ல வேண்டும்! ★

வெண்பா, விருத்தமாகிறது!

இதுவரை தென்றல் வெண்பாப் போட்டியில் கலந்து கொண்டு தமிழுக்குப் புத்திலக்கியம் அளித்த கவிஞர்கள் அனைவர்க்கும் தென்றல் நன்றி கூறுகிறது.

இத்துடன் வெண்பாப் போட்டியை நிறுத்திவிடுவதென முடிவு செய்து விட்டோம்.

கவிஞர்களே, ஏன் அதிர்ச்சியடைகிறீர்கள்?

வெண்பாப் போட்டியின் இடத்திலே விருத்தப் போட்டியைத் தொடங்குகிறோம். மாறுதல் வேண்டும் என்பதற்காக!

மகிழ்ச்சி தானே?!

விருத்தத்திலே, அறுசீர், எழுசீர், எண்சீர், பன்னிருசீர், பதினான்கு, பதினாறு எனப் பலப்பல வகை யுண்டு.

ஒவ்வொரு முறையும், ஒவ்வொரு வகை விருத்தப் பாடலின் அடி ஒன்றைத் தென்றலிலே அறிவிப்போம். அந்த அடியின் அளவொத்த மற்ற மூன்று அடிகளையும் நிறைவு செய்து, அழகுதமிழ்க் கவிதை பல ஆக்கித் தர வேண்டியது கவிஞர்களின் கடமை.

நாம் அறிவிக்கும் அடி பாடலின் ஈற்றடியாகத்தான் இருக்க வேண்டும் என்பதில்லை. நான்கு அடிகளில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம்.

1. அறுசீர் விருத்தம்.

ஓர் அடி:

"சிங்கத்தின் முன்னே குள்ளச்
சிறுநரிக் கூட்டம் போலே"

முடிவு தேதி: 7-2-'59.

தென்றல் விருத்தப் போட்டி : : சென்னை - 6.

நினைவூட்டிக்கொள்ளுங்கள்!

16-1-1801!

கட்டபொம்மன் கயத்தாற்றில் தூக்கிலிடப்பட்டுப் பதினைந்து திங்களாய்விட்டன.

அவனது தம்பியர் ஊமைத்துரையும் சிவத்தையாவும் பாளையங்கோட்டைச் சிறையில் வாடுகின்றனர்.

அவர்களை விடுவிக்க நினைத்த இளைஞர் அணி ஒன்று ஓட்டநத்தத்தில் திரள்கிறது. சிவகெங்கை மறவர் குடியில் பிறந்த வீரத்தேவன் அவர்தம் தலைவன்; ஊமைத்துரையோடு நெடுநாள் பழகியவன்.

வீரந்தேவன் தலைமையில் 2-2-1801 அன்று பாளையங்கோட்டையில் அனைவரும் மாற்றுருவில் திரண்டு, சிறையைத் தகர்பபதென முடிவெடுத்துக் கலைகின்றனர்.

சின்னவேட்டூர் நாயக்கர், ஓட்டநத்தம் சுப்பா நாயக்கர், கடற்கரை நாயக்கர், குளத்தூர், காடல்குடி பாளையக்காரர்களின் பிரதிநிதிகள் ஆகிய பல முதியோர்கள் கலந்துகொண்ட அக்கூட்டத்தில், புதுக்கோட்டையிலும் எட்டையபுரத்திலும் தமக்குப் பெருகியுள்ள ஆதரவைக் கூறுகிறான் ஊமைத்துரை. சிவகெங்கை அரசரின் உதவியை விடுதலைக்குப்பின் பெற முடிவு செய்கின்றனர்.

கூட்டம் முடிந்தபின் வீரத்தேவன் நண்பருடன் ,உரையாடுகையில், ஆறு மாதத்திற்குமுன் காணமற்போன தன் தங்கை கண்ணுத்தாளின் நினைவு வந்துவிட, கண்ணீர் வடிக்கிறான். நாட்டரசன்கோட்டையில் தங்கை காணாமல் போனபோது அவன் கடம்பூரில் இருந்தான். செய்தி கேட்டு வந்த அவன் பித்தனாய் அலைந்தான், மூன்று திங்கள். அவன் நண்பர் பலர் அவனைத் தேற்றி ஊமைத்துரை விடுதலைக்கான பணியில் ஈடுபடுத்தினர்.

17-1-1801.

சிங்கத்தேவன், கும்பினிச் சிப்பாயாக மாற்றுருவில் பாளையங்கோட்டைச் சிறைக்குள் புகுந்து ஊமைத்துரையைக் கண்டு தாக்கல் தெரிவித்துவிட்டு வருகையில் குழப்பமாகி, கும்பினிச் சிப்பாய்கள் அவனைத் தொடர்கின்றனர். தப்பியோடி வந்த சிங்கத்தேவன் ஒரு வீட்டினுள் ஏறிக் குதித்து, அங்கே ஏழாயிரம் பண்ணை ரங்கைய நாக்கரின் மகள் சுப்பம்மாவைக் காண்கிறான். நாயக்கர், ஸ்ரீவைகுண்டம் நெற் கொள்ளையில் மாண்டவர்.

வீடு வீடாய்த் தேடிய சிப்பாய்கள் அவ்வீட்டையும் தட்ட, அவள் சிங்கத்தேவனை, சிப்பாய் உடையை அகற்றிப் படுக்கையில் படுக்கச் செய்கிறாள். பிணமாகக் கிடந்த அவனைக் கண்ட சிப்பாய்கள் ஏமாந்து வெளியேறுகையில் சுப்பம்மாவின் உறவினர் வீட்டினுள் நுழைந்து வேடத்தைக் கலைத்துவிடுகின்றனர். சிங்கத்தேவன் தப்பி ஓடித் தன் வீட்டைகிறான். சுப்பம்மாள் கைதாகிறாள்.

வீட்டையடைந்த சிங்கத்தேவன் தன் மனைவி கண்ணுத்தாளிடம் நிகழ்ந்தவற்றைச் சொல்லிச் சிரிக்கிறான்.

வீரத்தேவனுக்கும் சிங்கத்தேவனுக்கும் மன வேறுபாடுண்டு. ஒருமுறை வீரத்தேவனின் தந்தை இராமலிங்கத்தேவரிடம் கண்ணுத்தாளை மணம் செய்துதர வேண்டினான், சிங்கத்தேவன். இராமலிங்கத்தேவர் மறுத்து ஏளனமாய்ப் பேசிவிட்டார். இந்தக் குறையோடு ஊமைத்துரையை விடுவிப்பதில் முன்னணியில் நிற்பவனாக வீரத்தேவன் காட்சியளிப்பது வேறு வருத்தத்தைத் தந்தது; சினந்தான்.

கண்ணுத்தாளை, வீரத்தேவன் இல்லாத வேளையில் கூட்டிக்கொண்டு வந்து மறைவாக வைத்துக்கொண்டான் அவள் இருவர் மன வேறுபாட்டையும் நீக்க முயன்றாள். வீரத்தேவன் சாவதைத்தவிர வேறு வழியில்லை என்றான் சிங்கத்தேவன்.

அதிகாலையில் சிங்கத்தேவனைத் தேடி பொம்மையாவுடன் வீரத்தேவன் அவன் வீட்டுக்கு வருகிறான். அண்ணன் வந்ததையறிந்தவள், ஓர் அறைக்குள் மறைந்துகொண்டாள். வீரத்தேவன் புறப்படுகையில் "அண்ணா" என்ற ஓலம் மட்டும் கேட்டது.

சிறையில் அடைபட்ட சுப்பம்மாவை காவலாளி ஒருவன், தன் காம விழிகளுக்குப் பலியாக்கிக்கொள்ள முனைய, அவள் தடுத்து வெல்கிறாள். இரவில் அவன் மறுபடியும் வந்தாலும் வரலாம் என எண்ணிய அவள் சங்கிலி ஒன்றைக் கையில் வைத்துக்கொண்டு, காத்துக் கிடக்கிறாள். பொம்மையா சிப்பாயாக மாற்றுருவில் உள்ளே நுழைய, "பழைய காமுகன்" எனத் தவறாக எண்ணிய சுப்பம்மா சங்கிலியால் அவனைத் தாக்க இரத்தக் காயம் ஏற்படுகிறது. பின்னர்க் காவலாளிகளிடம் தென்படாது தப்பி, சுரங்கம் ஒன்றின் வழியாகச் சிறைச்சாலையை விட்டு வெளியேறுகிறாள். மேலே ஏற முனைகையில், அதே வழியாக உள்ளே இறங்க முயன்ற ஓர் இளைஞனையும் பெண்ணையும் தீவட்டியால் தாக்கிவிட்டு வெளியேறுகிறாள்...

"அண்ணா" என்ற குரலைக் கேட்ட வீரத்தேவன் ஒன்றும் பேசவழியற்று, ஏதோ நினைத்து நெல்லை செல்கிறான்.

வீரத்தேவனைக் காணமுடியாத அவலத்தை எண்ணி, கண்ணுத்தாள் தற்கொலைக்கு முயன்று கிணற்றில் குதிக்க, சிங்கத்தேவன் காப்பாற்றுகிறான். அவன் அவள் செயலைக் கண்டு இளகி, தேற்றுகிறான்.

இதற்கிடையே, நெல்லையிலிருந்து திரும்பும் வீரத்தேவன் பொம்மையாவைக் காண்கிறான். சுப்பிரமணிய பிள்ளையிடம் ஊமைத்துரை விடுதலைக்குக் கடனாகப் பணம் கேட்டதையும், அவர் ஊமைத்துரையின் கையெழுத்தைப் பெற்றுவரச் சொன்னதையும், அதைப் பெறச் சிறைக்குள் சுரங்க வழியாக அவரது மகனும் மருமகளும் சென்றிருப்பதையும் சொல்கிறான். பொம்மையா கல்லாகிறான். தான் சுரங்கத்தில் தாக்கிவிட்டு வந்த இளைஞனும் பெண்ணும் அன்னாராகவே இருக்கக் கூடுமென்று கருதி அழுது சொல்கிறான். அதைக்கேட்ட வீரத்தேவன் சினக்க, பொம்மையா மறுபடியும் சிறைசென்று செய்தி அறிய முயன்று தானுமே காவலர் கையில் சிக்குகிறான் சுப்பிரமணிய பிள்ளை மகன் இராமையா தீப்பட்டதால் இறந்துவிட, முகப்புண்பட்ட அவன் மனைவி இலட்சுமி அழுவதையும், சவம் சுடலை செல்வதையும் அறிகிறான். வீரத்தேவன் இடைவழியில் வந்து சேர்கிறான். வீரத்தேவன் துடிக்க, காவலர் கதற, இலட்சுமி உடன்கட்டை ஏறுகிறாள். வீரத்தேவன் நடுகல் நாட்டிவிட்டுச் செல்கிறான்.

இந்தக் காலத்தி...ல்

சிவகெங்கைச் சீமை பல படையெடுப்புகளுக்கும் தாக்குதல்களுக்கும் ஈடு கொடுத்துத் தலைநிமிர்ந்து நிற்கிறது. இரண்டாயிரம் சதுரக் கற்கள் பரப்புள்ள சிவகெங்கைச் சீமை 1730 வரை இராமநாதபுரம் சீமையோடு இணைந்து கிடந்தது.

கண்ணதாசன்

அவ்வாண்டுமுதல் சுவான துரைராசன் எனப்பட்ட சசிவர்ணத் தேவரின் ஆட்சியில் சிவகெங்கைச் சீமை தனி ஆட்சி அமைத்துக் கொள்கிறது. அவரது பரம்பரையில் வந்தவர் முத்துவடுக பெரிய உடையணத் தேவர் ஆவார். அவர் தன் மனைவி வேலுநாச்சியாரோடு ஆண்டு வருகிறார். பொன்னுத்தாளுக்கும் மொக்கப் பழனியப்ப சேர்வைகாரருக்கும் பிறந்தோரான மருதிருவர் முத்துவடுகரின் கண்களாகவும் கைகளாகவும் விளங்குகின்றனர். மொக்கப் பழனியப்ப சேர்வை இராமநாதபுரச் சீமையின் வலிவு மிக்க படைத் தளபதி.

கும்பினியார் துணையுடன் கள்ள வழியில், ஆர்க்காட்டு நவாப் மகன் காளையார் கோவிலில் இருந்த மன்னர் முத்துவடுகத் தேவரையும் இளைய ராணியையும் கொன்றுவிடுகின்றான். மருதிருவர் பெரிய ராணியார் வேலுநாச்சியார் உடன் திண்டுக்கல் செல்கின்றனர். அங்கிருந்த ஐதர் அலியின் துணைபெற்று (திப்பு சுல்தானும் தங்கியிருந்ததாகச் சொல்வர்) மதுரை வழியாக சிவகெங்கை வருகின்றனர். மதுரை முத்தனேந்தல் வழியாக தம்முடன் சேர்ந்த நாட்டு மக்களையும் அழைத்துக்கொண்டு காளையார் கோவில் நோக்கி விரைந்த மருதிருவர், மானாமதுரையில் பரங்கிப் பகை பதுங்கியிருப்பதை அறிந்து திருப்பித் தாக்குகின்றனர். பல இடையூறுகளுக்குப்பின் காளையார் கோவில் சேர்ந்து மாண்ட மன்னருக்கும் இளையராணிக்கும் மாலையீடு கட்டி வணங்கிவிட்டு சிவகெங்கை சேர்ந்து அமைதி காண்கின்றனர். கப்பத்திற்கு ஆசைப்பட்ட நவாபுவின் வாயில் மண்ணைப் போடுகின்றனர்.

தோழர்கள் பலரின் வேண்டுகோளுக்கிணங்க, தென்றல் 1958 பொங்கல் மலரில் வெளியான **அண்ணா** அவர்களின் படமும், 1959 பொங்கல் மலரில் வெளியான எம். ஜி. ஆர்., **எஸ். எஸ். ஆர், கண்ணதாசன்** ஆகியோர் இணைந்த படமும் தனித்தனியே அச்சிடப்பட்டுள்ளன. வேண்டும் தோழர்கள் அஞ்சல் செலவு உள்பட கீழ்க்கண்டபடி அஞ்சல் தலைகள் அனுப்பிப் பெற்றுக்கொள்க :

அண்ணா படம் ... 31 புதிய காசுகள்

எம். ஜி. ஆர்.
எஸ். எஸ். ஆர்.
கண்ணதாசன் } 31 புதிய காசுகள்

விற்பனையாளர்கள், தேவையானவற்றிற்கு கழிவு 6 காசுகள் நீக்கி பிரதி ஒன்றுக்கு 25 காசு வீதம் முன்பணம் அனுப்பிப் பெற்றுக்கொள்க.

பொறுப்பாளர்,
" தென்றல் "

ராணி வேலுநாச்சியார் அரசியாகவும், சின்னமருது பிரதானியாகவும், பெரியமருது தளகர்த்தனுவும் ஆண்டு வருகின்றனர்.

காலவெள்ளம் நாச்சியாரைக் கொள்ளை கொள்கிறது. ஆட்சியை, பெரிய மருதுபாண்டியரிடம் ஒப்படைத்து இறக்கிறார், நாச்சியார். முத்துவடுகத்தேவரின் உறவினரான சக்கந்தி வெங்கணப் பெரிய உடையார் என்பவருக்கு முடிசூட்டித்தான் ஆட்சியைக் கவனிக்கின்றனர் மருதிருவர். என்றாலும் "சேர்வைக் காரரான மருதிருவர் தேவர் வம்ச ஆட்சியை ஆள்வதா?" என படமாத்தூர் ஒய்யத்தேவர், அவரது தம்பி முத்துவிஜயரகுநாத உடையணத் தேவர் ஆகியோர் எதிரணி அமைத்தனர். மருதரசர் அவற்றை எல்லாம் பொறுத்தார்.

நாடு செழித்தது; அமைதி தவழ்ந்தது; மேஜர் வெல்ஷ்போன்ற ஆங்கிலத் தளபதிகளும் மருதரசரின் நட்பையே நாடி நின்றனர். மருதரசர் ஆங்கிலேயர் உள்பட யாருக்கும் கப்பம் கட்டாது ஆண்டனர்.

பதவி வெறிகொண்ட படமாத்தூர் கௌரிவல்லபத்தேவர் நாட்டில் கொலை, கொள்ளை முதலிய கொடுமைகளைத் தூண்டியும், மருதரசர் அவற்றை மாய்த்தனர்.

இன்னும் எத்துணையோ சிவகெங்கைச் சீமையின் புகழ். அந்தச் சீமைக்குத்தான், பாளையங்கோட்டையிலிருந்து, புறப்பட்ட வீரத்தேவன் வந்து சேர்ந்தான்.

வழிப்போக்கர் விடுதியில் தங்கினான். விடுதியின் காவல்காரர் ராமசாமித்தேவரும், அவர் மகள் அஞ்சுகமும் அவனை மகிழ்விக்கின்றனர்.

அஞ்சுகமும் அவனும் புதிய பாதையில் அடி எடுத்து வைத்துவிட்டனர்

காலையில் மருதரசரைக் காண, ராமசாமித்தேவருடன் செல்கிறான்; காண்கிறான்; ஊமைத்துரையை விடுவிக்கப் பண உதவி வேண்டுமென்கிறான்; மாலையில் முடிவு சொல்வதாக வழியனுப்புகிறார். ஆனால் வெளியில் வருகையில் கறுத்தான் என்பான் கூறிய பேச்சு, இடியாகிறது

மருதரசரை மாலையில் சென்று காண்கின்றனர், வீரத்தேவன், ராமசாமித்தேவர், அஞ்சுகம் ஆகியோர். தடைக்கல்லாகக் கறுத்தான் தலையிடுகிறான் பெரியமருதரசர் துணை செய்யாதவாறு தடுக்கிறான் கறுத்தான். ராணியார் அரசரை அழைக்கிறார். ஏதோ சொல்ல. அதே நேரத்தில் மேஜர் வெல்ஷ் வந்திருப்பதாகத் தாக்கல் வருகிறது நோக்கம் என்ன...?

மேஜர் வெல்ஷ் தன் தாயகம் சென்று திரும்பியதால், அங்கு கிடைத்த அரும் பொருள்களைக் கொணர்ந்து அவற்றைத் தன் நண்பர்களான மருதுபாண்டியர்க்கு அளித்து, கண்டு விட்டுப் போகவே வந்திருந்தான். வெல்ஷ் வந்த நேரத்தில் சின்னமருதுவும் வந்து சேர்கிறார்: உரையாடி விடை பெற்றுச் செல்கிறான் வெல்ஷ்.

பெரியவருக்கு அவ்வளவு துடிப்பில்லை எனினும் சின்னமருதுவுக்கு ஊமைத்துரையின் விடுதலைக்கு உதவப் பெரும் துடிப்பு. அவர் இராமசாமித்தேவரை அழைத்து "வீரத்தேவன் எங்கே?" என்று கேட்க, தன்னுடன் வந்த வீரத்தேவனை காணாது திடுக்கிடுகிறார் அவர். எல்லோரும் தேடினர்; நகர் முழுதும் தேடினார்; அவனைக் காணோம்.

சின்னமருது துணிந்தார் எதற்கும்.

சிவகெங்கை மன்னர் நிலையையும், வாயாடிகள் பேச்சையும் கண்டு தனக்கு உதவி கிடைக்காது என்று தப்புக் கணக்குப் போட்டுக்கொண்ட வீரத்தேவன் யாரிடமும் சொல்லாமல், பாளையங்கோட்டை வந்து சேர்ந்தான். சிங்கத்தேவன் வீட்டில் இல்லை; பொம்மையாவைத் தேடிப் புறப்பட்டான்.

பொம்மையா சிறை உடைப்புக் கானவற்றைச் செம்மையாய்ச்செய்து வைத்திருந்தான். அவனைத் தேடிப் புறப்பட்ட வீரத்தேவன் ஆற்றில் குளித்துவிட்டுத் தூங்கி எழுகையில் குதிரை மாண்டு கிடக்க, துடிக்கிறான். வழக்கு நிலத்தில் ஊன்று கோல் இல்லை; போர்க்களத்தில் குதிரை இல்லை. மறுநாளோ சிறை உடைப்பு.

காலையில் பாளையங்கோட்டைச் சந்தைப் பொட்டலில் மாற்றுருவில் திரண்ட மறவரணி பகையை நொறுக்கியது; சிறை உடைந்து ஊமைத்துரை விடுதலையானார். எல்லோரும் மறைவிடத்தில் கூடி அடுத்த ஏற்பாட்டைச் சிந்திக்கையில் இராமசாமித்தேவர் வீரத்தேவனை நோக்கி, "சின்னமருதரசரைக் கண்டாயா?" என்று கேட்டார். சின்னமருதுவா? அவர் எங்கே இங்கே வந்தார்?

சின்னமருதுவோடு தங்கள் வந்த விபரத்தைச் சொன்னார், இராமசாமி. ஊமைத்துரையும் பிறரும்பாஞ்சாலங்குறிச்சி செல்வதென்றும், வழியில் மருதுவைத் தேடிக்கொண்டே போவதென்றும் முடிவெடுத்துப் புறப்படுகின்றனர். வழியில் ஒட்டப்பிடாரம் வெடிமருந்து கிடங்கைச் சூறையாடுகின்றனர்.

இடையே, சிங்கத்தேவனைக் காணாது கண்ணுத்தாள் பாஞ்சாலங்குறிச்சிக்குப் புறப்படுகிறாள் வழியில் இருட்டிவிட இடைப்பட்ட ஒரு சிறு கிராமத்தினை அடைகிறாள். அங்கிருந்த திண்ணை ஒன்றில்உட்கார்ந்து இளைப்பாறுகையில், வீட்டுக்குரியவனான சென்னகேசவ நாயக்கர், உணவுண்டு போகும்படி உள்ளே அழைத்து, பலி கொள்ள முனைகிறார். கண்ணுத்தாள் மறுக்கிறாள். நிலை மீறுகையில் யாரோ கதவைத் தட்ட நாயக்கர் ஓடி ஒளிகிறார் காட்டில். கதவை உடைத்துஉள்ளிருந்த பெண்ணை வெளியேற்றிய சிங்கத்தேவனும் வீரத்தேவனும் திகைக்க, அவள் மயங்கி வீழ்கிறாள்.

சிறை உடைப்பில் தன் குதிரை பலியாகிவிட்டதால், வேறு குதிரை கிடைக்கும்வரை நடந்தே செல்வது என்று புறப்பட்ட சின்னமருது. வழியில் தென்பட்ட ஒருவனிடம் குதிரை ஒன்றை விலைக்கு வாங்கிச் செல்கிறார். கைவசம் பணம் இல்லாததால் தன் புலிநகச் சங்கிலியை ஈடாகத் தந்து செல்கிறார். விடுதி ஒன்றில் இறங்கிப் பசியாறி வெளி வருகையில், வெள்ளைப்படை அவரைக் கைப்பற்றுகிறது, மேஜர் காலின்சைக் கொன்று அவன் குதிரையைக் களவாடியதாக. விலங்குடன் இழுத்துச் செல்லப்பட்ட மருதுவை, அவ்வழிச் சென்ற கறுத்தானும் கண்டு விடுகிறான்.

மன்னர் நிலை என்ன...?

மங்கை கண்ணுத்தாள் கதி ஏது...?

★

(அடுத்த இதழில்:
கண்ணுத்தாள் குழப்பம்.)

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
சங்குபிள்ளை ...15, திண்டுக்கல்ரோடு, மதுரை.

நான் தெய்வத்தை நம்புகிறேன்!

பண்டார மாகவில்லை; பட்டையிட்டுக் கொள்ளவில்லை;
பெண்டோடு பிள்ளைகளைப் பெருமாய மாக்கவில்லை

வண்டாடும் மென்மலரும் வாடுமெனப் பேசவில்லை
வெள்ளாடை யிற்புழுதி விளைகாவி கட்டவில்லை!

பூசுவது வெண்ணீருப் புத்திகெட்டுப் போகவில்லை!
ஈசுவரன் சன்னிதியில் ஏங்கிஉளம் வாடவில்லை!

பேசுவ தெலாமவனின் பெயராகக் கொள்ளவில்லை.
ஆசைமலம் நீக்கிவிட்டே ஆரணங்கைத் தேடவில்லை.

தேவாரம் பாடவில்லை; திருப்புகழை நாடவில்லை!
பூவாரம் காய்பழத்தில் பூசைசெய ஓடவில்லை!

ஆவாரும் அழிவாரும் ஆண்டவனின் பொம்மைஎனப்
பாவாரம் சூட்டிவிட்டுப் பைங்கிளியைக் கூடவில்லை!

கோவிற் படியேறிக் குளங்களிலே முக்குளித்து
நாவிற் கொடுமைஒரு நாழிகையில் நூறுகொலை

பாவச் செயல்களுக்கோர் பாடம் வகுத்துவரும்
தேவாக்கள் போலேநான் தெய்வத்தை நம்பவில்லை!

கைகொடுப்பான் ஓர்கடவுள்; கண்துடைப்பான் ஓர்கடவுள்
பொய்யறுப்பான் ஓர்கடவுள், புன்னகைப்பான் ஓர்கடவுள்

மெய்வளர்ப்பான் ஓர்கடவுள், மிஞ்சுதமிழ் இன்பமெனும்
செய்விளைப்பான் ஓர்கடவுள், தீக்குளித்த பத்தினியே

கண்ணில் நிறைகடவுள்; களத்தில் உயிர்விடுத்த
புண்ணியனும் ஓர்கடவுள்; பூந்தமிழை மாய்த்துவரும்

எண்ணரிய சாதிகளை எதிர்த்தடிப்பான் ஓர்கடவுள்
வண்ணமிகும் இக்கடவுள் வரிசையைநான் நம்புகிறேன்.

தெய்வம் எனும்பெயரைத் தேடிவைத்த ஏடுகளும்
தெய்வ குணங்களுக்குச் சித்தரித்த வாக்கியங்கள்

பொய்கெடுக்கும் பொருளெனவே போதிப்ப தாரறியார்?
கையொடிந்த பக்தர்களே கடவுணெறி கொன்றுவிட்டார்!

வகுத்தான் ஒழுங்குமுறை வளர்த்தான் கெடுத்துவிட்டான்!
புகுத்துந் திறமையினுற் பொருள்மாய்த்துப் போட்டுவிட்டான்!

ஏங்காமல் காப்பதற்கே இயல்பெடுத்த தெய்வமெலாம்
தேங்காய்க்குக் காத்திருக்கச் செய்துவிட்டார் பூசுரர்கள்!

அணியான நேர்வழியை ஆக்கவந்த ஆண்டவனை
மணியோசை கேட்டிருக்க வைத்துவிட்ட பக்தரெலாம்

தெளிவான உண்மையுடன் தெய்வநெறி சொல்பவரை
அழிவான நாத்திகத்தின் ஆளாக்கிக் காட்டுகிறார்!

கோயிற் படிமிதிப்பான் கொண்டிருக்கும் பத்தியினும்
வாயில் வழிநடவான் வைத்தபக்தி மிக்குயரும்!

தாயைக் கதறவிட்டுச் சாமியடி பார்த்திருப்பான்
தாயனைக்கும் பேரறிவைச் சாடுவதோ பக்திவழி!

நெற்றியிலே திருநீறு, நீண்டதொரு பின்குடுமி
புத்தியெலாம் சத்தியத்தின் புதைகுழிக்குத் தங்கநகை

இத்தகைய தேவர்களின் இயல்பிழந்த வேடவழி
நித்தியத்தை நன்குணர்ந்த நேசவழி ஆவதிலை!

நம்புகிறேன் தெய்வத்தை நானென்று கூறுகையில்
வெம்பிவிழும் மானிடரை மேலெடுப்பான் பேர்கூறி

தம்பி! இவருனக்குச் சாமியென்றும் கூறிடுவேன்!
அப்படித்தான் கலைவாணன் ஆனன் கடவுளென!

அவ்வழியில் மேற்போனல் அடுத்துவரும் தென்னுட்டில்,
ஒவ்வொருநாள் ஒவ்வொருவர் உயர்கடவு ளாய்வருவார்

அன்னவரை நம்புவதே ஆண்டவனை நம்புவதாம்!
இன்னமுறை எந்நாளும் ஏற்கும் தமிழ்முறையாம்

தென்னவரே எங்கள் திராவிடரே இவ்வழியே
முன்னமுள பக்திநெறி முடிக்குந் தமிழ்நெறியாம்!

கண்ணதாசன்

சந்திரசேகரப் பாவலர்

அ. திருமலை முத்துசுவாமி, எம் ஏ., பி. டி., டி. லிட். எஸ்சி.

பதவுரை பொழிப்புரை கூறுவதோடு பண்டிதர் குழாம் வேலையை முடித்துக் கொண்டிருந்த நாட்களில், கடமையாற்றப் புறப்பட்ட புலவரேறு ஆவார், சந்திரசேகரப் பாவலர். பண்டிதர்கள் போற்றித்தொழுத புளுகு மூட்டையை, சாடிச் சாய்த்தார், தாம் "குடியரசு" மூலம் தந்த ஆராய்ச்சிக் கட்டுரைகளால். அதுவே பின்பு "கம்ப ராமாயண ஆராய்ச்சி" என்ற பெயரில் நூலாய் வந்தது.

திரு. பாவலர் அவர்கள் பெரியாரின் அன்புக்குரியவர்; இராவண காவிய அமைப்புக்கு ஆன்ற உதவி பல புரிந்து புலவர் குழந்தையை ஊக்கியவர்; சென்னை மாநிலத் தமிழ்ச்சங்க அமைச்சர்; தமிழ்நாடு சித்த வைத்திய சங்கத்தின் தலைவர்; பன்பொழியில் சித்த வைத்திய ஆய்வுக்கூடமும், மருத்துவக் கூடமும் அமைய மூலமாயிருந்தவர்; வான நூல், கணிதம், மருத்துவம் முதலியவற்றிலும் வல்ல தமிழ்ப்புலவர். வயது 63 ஆகிறது.

பயனுள்ள அவர் வாழ்க்கைக் குறிப்புக்களை பொங்கல் மலருக்கென அனுப்பினர், அவரது தம்பி மகனார் திரு. திருமலை முத்துச்சாமி. மலரில் இடமின்மையால் இதழில் இடம் பெறுகிறது. —(ஆ-ர்.)

★

தோற்றுவாய்

தமிழிலக்கிய வரலாற்றிலே இருபதாம் நூற்றாண்டு என்பது ஒரு திருப்பு மைய்யமாகும். தமிழிலக்கியத்திலே அது ஒரு புரட்சி அத்தியாயத்தின் தொடக்கம் என்னலாம். நந்தம் செந்தமிழன்னை புத்தம் புதுக் கவிதை மாலைகளையும், தித்திக்கும் தேன்மொழிக் கட்டுரைகளையும், சுடர் விடும் பல புரட்சிப் பனுவல்களையும் பெற்றுப் பேரவையிலே பேரொளியுடன் இலங்குமாறு செய்தது இந்த இருபதாம் நூற்றாண்டேயாம். இந் நூற்றாண்டில்தான் ஊறும் பகுத்தறிவை இல்லாதொழிக்கும் உளுத்துப்போன பழங்காலக் கருத்துக்களெல்லாம் தங்களின் வன்மை இழந்து, வாழ்வை இழந்து, அவற்றின் இடத்தை புதுமைக் கருத்துக்கள், சிந்தனையைத் தூண்டும்—சிந்திக்கவைக்கும் சீரிய நேரிய கருத்துக்கள் அழுத்தமாக, ஆணித்தரமாகப் பிடித்துள்ளன. இப் பணியில் பல உரைநடை ஆசிரியர்கள், கவிஞர்கள் சிறந்த பங்குகொண்டு, காரிருள் கவ்விஇருக்கும் நீலவானில் ஆதவன் தோன்றி இருள் அகற்றுவதுபோல் பாமரர்க்குப் பகுத்தறிவுக் கொள்கைகளைப் பரப்பிவருகின்றனர். அவர்களின் பட்டியலில் ஒருவராக வைத்தெண்ணப்படும் தகுதியும் தரமும் சந்திரசேகரப்பாவலர் என்ற இ. மு. சுப்பிரமணிய பிள்ளை அவர்களுக்கும் உண்டு. இப் பேரறிஞரைப் பெற்றெடுத்த பேரும் பெருமையும் நெல்லை மாவட்டத்தையே சாரும்.

பிறப்பு

பேட்டைக் கணக்கப் பிள்ளை என்ற சுப்பிரமணியபிள்ளை என்பவரை இளசை என்ற எட்டையபுரம் மக்கள் அனைவரும் நன்கு அறிவர். எட்டையபுரத்தை அடுத்துள்ள நடுவிற்பட்டியில் இன்று கண்ணுக்கு விருந்தாய்க் காட்சி அளிக்கும் கடைவீதிக்குக் கால்நாட்டும் கவினுறு செயலை இவர்களே செய்தனர். அன்னாரின் அருமந்த செல்வனாய் திரு. முத்துசுவாமி பிள்ளை அவர்கள் தோன்றினார்கள். இவர்கள் இளமையிலேயே தமிழினிடத்து அளவுகடந்த பற்றுடையவர்களாதலால் தமிழ் நூல்களையெல்லாம் நன்கு கற்றுச் சிறந்த புலவராக விளங்கினார்கள். மேலும் சோதிடத்திலும் வல்லுநராய் இவர்கள் இருந்ததால் எட்டையபுர அரசவையில் அரும்பணியாற்றி மன்னரின் மதிப்பைப் பெற்றுச் சீரும் சிறப்புமாய் வாழ்ந்தார்கள். புரட்சிக்கவி பாரதியாரின் தந்தையான சின்னச்சாமி அய்யர் அவர்களின் உழுவலன்பராகவும் இவர்கள் இருந்தார்கள். இவர்கள் செய்த தவத்தின்பயனாய், கி. பி. 1896-ஆம் ஆண்டு சந்திரசேகரப் பாவலர் என்ற சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் இவர்களது மூத்த செல்வனாய்ப் பிறந்தார்கள். இவர்களுக்கு இளவல் ஒருவர் உண்டு. அவர்களே இன்று வடக்கன்குளம் கன்கார்டியா உயர்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராய்ப் பணியாற்றும் திரு. இ. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் ஆவார்கள். இவ்விருவரது அன்னையாரின் பெயர் கோதை நாச்சியார் ஆகும்.

கல்வி

எட்டாவது வயதை சந்திரசேகரப் பாவலர் எட்டிப் பிடிக்கும் முன்பே இவர்களது தந்தையார் இயற்கையோடு இரண்டறக் கலந்தார். 'தந்தையோடு கல்விபோம், தாயோடு அன்பு போம்' என்பது முதுமொழியாகும். இம் முதுமொழியைப் பொய்ப்பிக்கும் வகையில் தந்தையை இழந்தாலும் மைந்தர் சிந்தை திரியாது கல்வியைக் கண்ணும் கருத்துமாய்க் கற்று வரலானார்கள். சீவில்லிபுத்தூர், அருப்புக்கோட்டை, எட்டையபுரம் பள்ளிகளில் முறையே பயின்ற பாவலர்பள்ளிஇறுதித் தேர்வில்சிறந்த முறையில் வெற்றிபெற்றார்கள். ஆங்கிலத்தைக் கற்கையிலும்—அயல் மொழியைக் கற்கையிலும், தென்னாட்டின் பொன்மொழியான தீந்தமிழில் இவர்கள் கொண்டிருந்த தணியாத பற்று அம்மொழியைத் தளராது ஐயந்திரிபறக் கற்கச் செய்தது. இலக்கண இலக்கியங்களை இனிது பயின்று, தமிழாசிரியப் பயிற்சியும் பெற்று, தமிழிற் சிறந்த புலமையை அடைந்த இவர்கள் இன்று நெல்லை மாவட்டத்தின் முதுபெரும் புலவராய் விளங்குகிறார்கள்.

தமிழ்ப் பணி

தமிழாசிரியர்கள் பணியே தலை சிறந்த பணி எனத் தம் உள்ளத்திலே கொண்ட இப்பெரியார், முதலில் பத்தமடை உயர்நிலைப் பள்ளியிலும், பின்னர் நெல்லை மாவட்டக் கழக உயர்நிலைப்பள்ளிகளிலும் ஏறத்தாழ முப்பத்தைந்து ஆண்டுகள் தொடர்ந்து தமிழாசிரியராகப் பணியாற்றி, வேலையினின்று ஓய்வுபெற்று இன்று சங்கரன்கோவிலில் இருந்துகொண்டு தமிழ்ப்பணி செய்து வருகிறார்கள்.

நூல்கள்

எழுதுதல் என்பது ஏற்றம் பெற்ற ஒரு கலையாகும்; யார்க்கும் எளிதாய் அமையாத ஒரு திறமையாகும். எழுத்தாளர்களின் எண்ணிக்கை அதிகரித்தாலும் அத்துறையில் புகழ் பெற்றவர்கள் ஒரு சிலரே. அத்தகையோரில் ஒருவராக நம் பாவலர் விளங்குகின்றார்கள். உரைநடைமட்டுமல்ல, உள்ளத்தை உருகச்செய்யும் கவிதை இயற்றும் ஆற்றலும் உடையவர்கள் இவர்கள். சாவித்திரி அகவல், சிங்கைப் பதிற்றுப் பத்தந்தாதி, இராமாயண அகவல், காந்தி சிந்தாமணி என்பவை இவர்களது கற்பனையில் எழுந்த அற்புதக் கவிதை நூல்களாகும். இவர்கள் எழுதிய உரைநடை நூல்களில் தம்பிரான் தோழர், ஐதரலி, வ. உ. சி. என்ற மூன்றும் குறிப்பிடத் தகுந்தனவாகும். மூவாயிரம் அடிகள் கொண்ட, அகவற் பாவாலான இவர்களது கிருட்டின குமாரி என்ற நாடக நூல், நாடகத் தமிழில் இவர்களுக்கிருக்கும் புலமையை நன்கு எடுத்துக்காட்டுகின்றது. மேலும் இவர்கள் எழுதியுள்ள தமிழ்ப்பாட நூல்கள் பலவாகும்.

இதிகாச ஆராய்ச்சி

இவர்கள் எழுதிக்குவித்த கட்டுரைகளும்கவிதைகளும் கணக்கிலடங்கா. ஆனால் அவைகள் தராத மதிப்பையும் மாண்பையும் இவர்களது இதிகாச ஆராய்ச்சி வாங்கித் தந்தது. இராமாயண, மகாபாரத இதிகாசங்களை ஆழ்ந்து படித்து, அவைகளின் கருத்துக்களை ஆய்ந்து, தமிழ்ப் பண்பாட்டிற்கு அரணாக அல்லாது முரணாக அமைந்த கருத்துக்களை எல்லாம் கண்மூடித்தனமாய்க் கொள்ளாது, முதன்முறையாக வன்மையாகக் கண்டித்து எழுதிய மேன்மை இம் மேதைக்கே உரியதாகும். இவர்கள் செய்த இதிகாச ஆராய்ச்சி மக்கள் கண்களைத் திறந்தது; உள்ளத்தை ஈர்த்தது. இதிகாச ஆராய்ச்சிக் கட்டுரைகள் முதலில் 'இந்தியன்' என்ற இதழில் வெளிவரலாயின. மக்களிடையே மிகுந்த பரபரப்புக் காணப்பட்டது. மக்கள் கண்ணும் கருத்துமாய் இக்கட்டுரைகளைப் படித்துப் பாவலரைப் பெரிதும் பாராட்டுவாராயினர். அரசியல் தாத்தாவான ஈ. வெ. ரா. பெரியாரின் உள்ளத்தையும் இக் கட்டுரைகள் கொள்ளைகொண்டன. அன்னாரின் வேண்டுதலின்படி இக்கட்டுரைகளைத் தொடர்ந்து சந்திரசேகரப் பாவலர் என்ற பெயரில் இவர்கள் "குடியரசில்" எழுதிவரலானார்கள். ஆயிரக் கணக்கான படிகள் அச்சடிக்கப்பட்டன. தமிழ் மக்களிற் பெரும்பாலோர் விரும்பிப் படித்தனர்.

இப் புலவரது தமிழார்வம்தான், தமிழர் முறைக்கு ஒப்ப சைவப்பஞ்சாங்கம் ஒன்றை வெளியிட வைத்தது. வானநூல், கணிதம் இவற்றை நன்கு கற்றதின் காரணமாய், இவர்கள் இப் பஞ்சாங்கத்தைப் பல ஆண்டுகளாய்த் தொடர்ந்து வெளியிட்டு வருகிறார்கள். "இருந் தமிழே உன்னால் இருந்தேன் விருந்தமிழ்தம் எனினும் வேண்டேன்" என்ற கொள்கையைக் கொண்ட இவர்கள், எங்கும் தமிழ் முழக்கம் கேட்க வேண்டும் என்ற நோக்கத்துடன், துறைதோறும துறைதோறும் தமிழ்த் தொண்டு செய்யத் துடித்து எழுந்தார்கள். இதன் காரணமாய் 1994-ஆம் ஆண்டு சென்னை மாகாணத் தமிழ்ச் சங்கத்தை நிறுவி, அதன் செயலாளராக இவர்கள் இன்றும் பணியாற்றி வருகின்றார்கள். இச் சங்கச் சார்பில், கலைச்சொல் மாநாடு, சாரல் மாநாடு, புலவர் மாநாடு, தனித்தமிழ் சொல்வன்மைப் போட்டி பல இவர்கள் நடத்தி உள்ளார்கள். கலைச்சொற்கள் என்ற நூலையும், ஆங்கிலத் தமிழகராதி ஒன்றினையும், பல நாட்கள் பல அறிஞர்களுடன் சலியாது உழைத்து உருவாக்கி இச் சங்கத்தின் சார்பில் இவர்கள் வெளியிட்டுள்ளார்கள். தமிழில் ஆட்சிச் சொற்களைப் பலரது துணைகொண்டு ஆக்கி அண்மையில்நமதுமுதலமைச்சர் திரு. காமராசர் அவர்களிடம் இவர்கள் ஒப்படைத்தது நாம் அறிந்ததொன்றே.

உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர்களது ஊதிய உயர்விற்காகவும், எழுத்துச் சீர்திருத்தம் செந்தமிழைச் சீர்குலைக்காது இருப்பதற்காகவும் கிளர்ச்சி பல செய்த இப்பெரியார் ஓரளவு வெற்றியும் கண்டார்கள்.

பண்பு நலன்கள்

நேரிய உள்ளம், அஞ்சா நெஞ்சம் கொண்ட இவர்கள் உயர்வளிக்கும் உண்மையை உறுதியுடன் கடைப்பிடிப்பவர்கள், உயிர்க்கு உறுதுணையாக நிற்கும் ஒழுக்க நெறியில் சிறிதும் வழுவாதவர்கள். எளிமையான வாழ்க்கையை நடத்துபவர்கள். பொறுமையின் உறைவிடமாய் இவர்கள் விளங்கியபோதிலும், தமிழுக்குத் தீங்குசெய்ய விழையும் எவனையும் எளிதில் விடமாட்டார்கள்; நேருக்கு நேர் நின்று உண்மையை எடுத்துக் கூறி அதனை உணரச்செய்வார்கள். திருந்தாவிடில் அவன்மீது சீற்றங் கொள்ளவும் செய்வார்கள். சுருங்கக் கூறின் அவர்களது உள்ளம் தமிழ் உள்ளம்; தூய உள்ளம். அவ்வுள்ளத்தை நாம் அனைவரும் பெற்றால் வண்டமிழ் நாடு வளம் பல அடையும் என்பதில் எள்ளளவும் ஐயமில்லை. ★

ஜுபிடரின் அண்ணுபத்தி
JUPITER PERFUMERS
M. S. T. V. NEETHI MOHAN, MADURAI.
எங்கும் கிடைக்கும்

—2-ம் பக்கத் தொடர்ச்சி—

கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுக்கூட்டத்திற்கு கோவிந்தன் என்பவர் பின்வருமாறு விளம்பரம் செய்தாராம்! "மகாஜனங்களே! வடநாடு தென்னுடு என்று பேசுகின்ற சோதாக் கும்பல், பாட்டாளித் தலைவன் டாங்கே மாதம் உபகாரச் சம்பளம் 5000 ரூபாய் பெறுவதாகப் பொய் சொல்லித் திரிகிறது. அதற்குத் தக்க முறையில் பதில் இன்றைய கூட்டத்தில் சொல்லப்படும்"-என்று! கழகத் தோழர்கள் முன்னின்று கேட்டார்கள்-காத்து நின்ருர்கள் கடைசிவரை, பதில் வருமென்று! **"திராவிட முன்னேற்றக் கழகம் உணவுக் கொள்கையைப் பற்றிப் பேச வேண்டுமே தவிர தனிப்பட்ட தலைவர்களைப்பற்றிக் குறைகூறக் கூடாது"—கே. ஆர். சுந்தரராமன் என்பவர் பேச்சு இப்படி! அடுத்துப் பேசிய வழக்குக் கிடைக்காத வக்கீல் ஏ. பாலசுப்பிரமணியம் என்பவரிடம் பாலு படிப்பகச் செயலாளர்-பந்தயங் கட்டியவர் விளம்பரத்தை நினைவூட்டி டாங்கே விசயத்தை விளக்கும்படி கேட்டிருக்கிருர். ஆனல் அவரும் ஆடிக் களைத்த ஆரணங்கைப்போல அமர்ந்து விட்டார்.** ஒலி பெருக்கிய காம்ரேடுகளுக்கு கணக்கில்லாக் கேவலம்!!! தொண்டர்கள் உள்ளூர்த் தலைவர்களை நம்புகிருர்கள். அவர்கள் மாவட்டத் தலைவர்களை நம்புகிருர்கள். இவர்களும் மாநிலத் தலைவர்களும், மாஜி பொலிட் பீரோத் தலைவர்களும், வடநாட்டுத் தலைவர்களை நம்புகிருர்கள், இறுதியில் எல்லோருமாகச் சேர்ந்து மாஸ்கோவுக்கு முன் மண்டியிடுகிருர்கள். கழகத்தவர் யாரைப் பார்த்து அனுதாபப்படுவது? இவர்களைப் பம்பரங்களாக்கிப் பார்வைச் சுழற்சியிலே ஆட்டிப் படைக்கின்ற குரு, குருச்சேவைத்தான் நாம் பாராட்ட வேண்டும்-ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சியின் 21-வது காங்கிரசில் நன்றியறிவிப்பைக் காணிக்கை செலுத்தப் போகும் கம்யூனிஸ்டுகளுக்குச் சம்மதமா?

இந்தியக் கம்யூனிஸ்டுகளின் தலைவரென்று முகநட்பிற்குக் கூறப்படுகின்ற தோழர் டாங்கே பற்றிய 'கரண்ட்' கட்டுரைகளுக்கு, தன்னைப் பற்றிய கடுமையான குற்றச்சாட்டுக்களுக்கு அவர் இன்றுவரையிலும் எந்தவித மறுமொழியும் சொல்லவில்லை, தெரிந்தும் தெரியாதவர்போல ஊமையாக இருக்கிருர். மதுரை நகர்ப்பகுதியில் மேலே விளக்கியபடி இத்தனை அலைமோதல்கள் தென்றலின் ஒரே ஒரு வினவுக்காக! மூன்று மாதங்களுக்குப் பிறகு 'ஜனசக்தி' தந்துள்ள பதிலையும் நாம் இங்கே கணக்கிட்டுப் பார்க்கவேண்டும்! 14-1-59 உரைகல் பகுதியில் "அண்மையில் அமெரிக்கத் துதிபாடும் ஆங்கில வார ஏடான 'கரண்ட்' ஒரு அப்பட்டமான அபத்தத்தை வெளியிட்டது. அதாவது ஒரு கம்யூனிஸ்ட் பெருந்தலைவரை அக்கட்சியிலுள்ளோருக்குப் பிடிக்கவில்லையென்ருல் உடனே அவரை உடல்நலம் இல்லை என்று காரணம் கூறி மாஸ்கோவுக்கு அனுப்புவார்களாம். அவர் அங்கேயே தீர்த்துக்கட்டப்படுவாராம். அப்புறம் அவர் திரும்பவே மாட்டாராம்." மாஜினி என்பவர் இப்படித் துணிந்து பொய்யுரைத்துள்ளார். **ஜனசக்தியின் படை** வரிசைகளை ஏமாற்றுவதற்கு இவ்வளவு பொய் போதும். ஆனல் 'கரண்ட்'கட்டுரையில் இந்த மொழிபெயர்ப்புக்காண ஆங்கில வாக்கியம் இல்லையென்பதனை உறுதியாகக் கூறுவோம். சொரணை இருப்பவர்கள், காரகாவைகைக்கூலியென்ற 'ரூபிள் சிங்காரி பிளிட்ஸ்' சொல்வது போல எடுத்துக் காட்டுபவர்களின் பேனு சோரம் போகாதது என்ருல் வாக்கியத்தை எடுத்துக் காட்ட வேண்டும்! "இவ்விதம் 'கரடி' விட்டதோடு மட்டும் 'கரண்ட்' நிற்கவில்லை. இந்தியக் கம்யூனிஸ்ட் தலைவர்களில் ஒருவரான எஸ். ஏ. டாங்கேயும் மேற்கண்டவாறுதான் மாஸ்கோவுக்கு அனுப்பப்பட்டுள்ளார் என்றும் அவர் திரும்ப வரப் போவதில்லை யென்றும் சத்தியம் செய்தது"-டாங்கேயைக் காப்பற்ற விரும்பும் 'ஜனசக்தி' பத்திரிகை நேர்மையற்ற தன்மையில் நடைபோடுவது நாணயக்குறைவான நாணத்தக்க செயலாகும்!

"நமது தி. மு. க. ஏடுகள்கூட இந்தக் கட்டுக்கதையோடு தங்கள் கைச் சரக்கையும் சேர்த்து ஏக அமளி துமளி செய்தன"—இந்தக் குறிப்பு இருக்கிறதே, இது மிகவும் கடைந்தெடுத்த கயமைத் தன்மையைக் காட்டுகிறது?"—டாங்கே விவாதம் 'தென்றல்' இதழ் மட்டுமே எடுத்துக் காட்டியது! 'ஜனசக்தி'க்குத் தெரியும்-மற்ற ஏடுகளையும் இணைப்பது மட்டரக அரசியல் நோக்கமாகும்! ஆற்றல் நிறைந்த பொதுவுடமைப் பீமன்கள் அல்லது பீரங்கிகள் 'தென்றல்' எழுதியது - நாங்கள் மறுக்கிறேம் - என்று சொல்லத் தகுதியுண்டா? ஆதாரம் இருக்கிறதா? 'கரன்ட்' சொல்லியதைக் காட்டிலும் கைச்சரக்கு சேர்க்கப் பட்டுள்ளதா? 5000 ரூபாய்க்கு உரைகல்லாரின் உளுத்துப் போன மறுப்பு ஏதாவது உண்டா? "கடைசியில் இது கெட்டிக்காரன் புளுகு எட்டு நாள் என்ற கதையில் முடிந்ததை சகலரும் அறிவர்" இப்படியும் கூறுகிருர்! உரைகல் தேய்க்கும் கருங்கல் மூளைகளுக்குச் சொல்வோம். மதுரைச் செய்திகளை-மேலும் கூறப்பட்டுள்ளவைகளை-நன்ருகப் படியுங்கள். டாங்கே 5000 ரூபாய்க்குள் அடைபட்டிருக்கும் சோகச் செய்தி-இன்னும் முடியவில்லை என்பதை இனியாவது உணருங்கள்! கம்யூனிஸ்டுகள் பம்பாயிலிருந்து இன்னும் மறுப்புரையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். அதை மறந்து மாஜினிகள் மார் தட்டுவது வறுமைக்காகச் செய்துகொள்ளும் உடல் விபசாரத்தைவிட தரங்கெட்ட அரசியல் விபச்சாரமாகும்! டாங்கேயின் கதை முடியவில்லை. அதன் முடிவுரையைக் கேட்கத் துடிக்கின்ற கம்யூனிஸ்டுகள்மாஜினிகளின் சொற்களைக் கேட்டுத் தாங்கள் தேடியலைகின்ற உண்மையை மறந்துவிடக்கூடாது! அவர்கள் கேட்காத தலைவர்கள் இல்லை. எவரும் இன்னும் பதில் தரவில்லை. கம்யூனிஸ்ட் கட்சியின் அரும் பெரும் புரட்சி வீரர்களே-கழகத்தவருக்குப் பதிலும் விளக்கமும் கூற உங்களுக்குத் தகுதியில்லை-உங்கள் கட்சித் தொண்டர்களுக்குப் பதில் கூறுங்கள்! அவர்களை ஏமாற்றுதீர்கள்!

—கூடலரசன்

—1-ம் பக்கத் தொடர்ச்சி—

வற்புறுத்துவதால், அமைச்சர் அறநெறியினின்று பிறழாதிருக்க வேண்டும் என்பது புலனுகும். அரசியலிலும் நேர்மை வேண்டும் என்பது கருத்தாகும் என்று சொல்லத் தேவையில்லை.

அமைச்சன் உருவத்தைக் கண்டு ஒருவரைப் புறக்கணிக்கலாகாது; ஏனெனில் உலகுக்கு அச்சாணி போன்றவர் தோற்றமும் ஏற்றுக் கொள்ளத்தக்கதாக இல்லாமலிருப்பதுண்டு. அமைச்சன் மன்னர்களுடன் விழிப்பாக நடந்துகொள்ள வேண்டும்; குறிப்பறியும் திறனும் வேண்டும்; மடையர்களிடம் மடையன் போலும், அறிவாளிகளிடம் அறிஞன் போலவும் நடந்து கொள்ள வேண்டுமாம். அடுத்துக் கெடுக்கும் ஆளாக அமைச்சன் இருத்தலாகாது என்றும் வள்ளுவர் எச்சரிக்கை செய்திருக்கிருர்.

சொல்வன்மை, அவையறிதல், அவையஞ்சாமை ஆகிய இம்மூன்று அதிகாரங்களும் அமைச்சனுக்குரியவையேயன்றிச் சொற்பெருக்காற்றும் முறைக்குக் கூறியவை அல்ல. பஞ்சாயத்துப்போன்ற அரசவையில் அமைச்சன் எப்படி அவையறிந்து அஞ்சாமல் சொல்வன்மையோடு பேசித் தன் கருத்தைப் பிறர் ஏற்றுக்கொள்ளுமாறு செய்வதற்குக் கூறிய குறிப்புக்களேயாகும் என்றறிக. பொதுவாக இவை சொற்பொழிவுக்குப் பயன்படுமாயினும், அவையில் அமைச்சன் திறம்படப் பேசுதற்குக் கூறியனவாகும். பரிமேலழகரும் இவ்வதிகாரங்களின் நுட்பங்களை உணர்ந்து எடுத்துக் காட்டியுள்ளார்.

அரண்

பண்டைக் காலத்தில் அரண் இன்றியமையாத பாதுகாவலாக இருந்ததனுல் அரணைப்பற்றிக் கூறினுர் வள்ளுவர். நீர் அரண், நில அரண், மலை அரண், காட்டரண் என இயற்கையும் செயற்கையுமாய் இந்நான்கு அரணும் சூழப்படுவது அரண் என்பதாம். நகரத்திற்கு மதில் அரண் இருந்தது. அம்மதில் அரண் உயரமாயும் அகலமாயும் உறுதியாயும் பகை வீரர்களால் ஏற முடியாததாயும் போர்க் கருவிகளைத் தன்னிடத்தே கொண்டதாயும் இருக்க வேண்டும்.

பொருள்

அரசனுக்குப் பொருள் இன்றியமையாதது என்று சொல்லவும் வேண்டுமோ? நாட்டின் நல்வாழ்வுக்குப் பொருள் வேண்டும்; நாட்டின் பாதுகாப்பிற்குப் பொருள் வேண்டும்; பகையை வெல்லப் பொருள் வேண்டும். உடையார் இன்மையாலே தானே வந்துற்ற பொருளும், சுங்கமாகிய பொருளும் பகைவர்திறையாகக்கொடுத்த பொருளும், ஆறிலொரு கடமையாகிய நிலவரியும் அரசனுக்குக் கிடைத்த பொருளாகும். வள்ளுவர் காலத்தில் இவைகட்குமேல் வருவாய் கிடைத்ததில்லை. முதன்மையான அரசாங்க வருவாய் நில வருவாயேயாகும். ஆறு வண்டி நெல் விளைந்தால் ஒரு வண்டி நெல் நிலவரியாகச் செலுத்த வேண்டும். உண்மையில் எண்ணிப் பார்த்தால் அக்காலத்திற்கு ஆறில் ஒரு கடமை அதிகமான வரியே என்றுதான் கருத வேண்டும். 60 ரூபாயில் 10 ரூபாய் வரியாகக் கொடுப்பது அதிகம் என்று சொல்லாமல் இருக்க முடியுமா?

[பொங்கல் மலரில் இக்கட்டுரையின் முற்பகுதி வெளியானது. இறுதிப் பகுதி அடுத்த இதழில் வரும்.]

மலர் மணம்

அரிய பெரிய ஒப்பில் செயல்களால் சீரிய முறையில் உருவாக்கப்பட்ட 'தென்றல் பொங்கல் மலர்' தனை நோக்கும்போது, வளர்ந்து விட்ட- வளருகின்ற- வளர்ச்சியையுடைய-திராவிட முன்னேற்றக் கழகத்தின் திண்மை தெள்ளெனத் தென்படுகிறது. வாழ்க தென்றல்! வாழ்க திராவிடம்!

—சா. கா. சாகுல்அமீது. சென்னை—21.

★

தென்றல் மலரில், பல அறிஞர்களால் வரையப்பட்ட எழுத்துக்கள், சித்திரங்கள் யாவும், மதிக்கவும் போற்றவும் தகுதி உள்ளவை.

—மீ. ப. பாலசுப்பிரமணியன், உறையூர்.

★

கண்ணதாசனின் "கவலையில்லாத மனிதன்" நாடகம் நகைச்சுவை நிறைந்த அறிவுப்பேழை! புதிய கருத்துக்கள் கொண்ட தங்கச் சுரங்கம்!

இன்னும் இதைப்போல் ஏராளமாக தென்றல் மலரிலே இடம் பெற்றிருந்த, காவியங்களும் கதைகளும் கட்டுரைகளும் ஓவியங்களும் தங்கச் சுரங்கமாக - வைரக்கற்களாக பத்திரப்படுத்த வேண்டிய சித்திரக் குவியல்கள்!

—"முல்லை" வேலன் சென்னை-1.

★

....

....

வந்த பொங்கல்
மலரைக் கண்டே
சிந்தை மகிழ்ந்தேன்!
சிந்தை மகிழ்ந்தேன்!
தென்றமிழ் வாழ்க!
தென்றல் வாழ்க!
என்றே ஏத்தி
வணங்குவன் யானே!

—தமிழன்பன்.

★

தென்றல் மலர்கண்டேன்;
தெள்ளமுதம் உண்டாற்போல்
என்றும் குறையாநல்
இன்புற்றேன்!-துன்றுபுகழ்ப்
பண்டைத் தமிழகத்தின்
பண்புணர்த்தும் கட்டுரைகள்
கண்டேன். களித்தேன்
களிந்து.

—பா. முருகையன். சென்னை—1.

★

மலர் கிடைத்தது. மணம் நுகர்ந்து மகிழ்கிறேன்.

—முல்லைவழுதி, கதிரம்பட்டி.

★

200 காசுகள் அல்ல-400 புதிய காசுகள்கூடக் கொடுக்கலாம்.

சத்து நிகர் தென்றல் பொங்கல் மலர் வாழ்க, வளர்க என உளங் கனிந்து வாழ்த்துகிறேன்.

—ஆத்தூர் அன்பு, திருச்சி.

வெண்பாப் போட்டி

34. தனிச்சீர் : விற்கொடியோன்

பொற்கோட் டிமயத்தைப் போர்தொடுத்து வென்றிட்டான்
கற்பரசி கண்ணகிக்குக் கல்லெடுத்தான்—விற்கொடியோன்
என்றபுகழ் பாடிடுவாய் இத்'தென்றல்' வெண்பாவால்
இன்பத் திராவிடமே இன்று.

—நல்லாண்பிள்ளை பெற்றன், செஞ்சி.

❁

கற்கண்டு முக்கனியிற் காணுச் சுவைத்தமிழின்
சொற்கண்டு சிந்தைத் துயரோட்டும்—விற்கொடியோன்
வென்றுவட வேந்தர் முடிமீது கல்லேற்றிச்
சென்ற சிறப்பே சிறப்பு.

—அறிவுதாசன், இடலாக்குடி.

❁

கற்பரசி கண்ணகிக்குக் கற்கொணர்ந்தான்; வந்தெதிர்த்த
அற்பவட வாரியரை அன்றொழித்தான்;—விற்கொடியோன்
தம்பியிளங் கோவடிகள் தந்த சிலம்பதுபோல்
அம்புவியி லுண்டோ அறை.

—மங்கையர்க்கரசி, விண்ணமங்கலம்.

❁

பொற்கொடியாள் பாவைப் புனிதவதி கண்ணகிக்கு
நற்கோவில் தானெடுத்து நாட்டியே—விற்கொடியோன்
மேரு தனை வென்று மேலுமொரு விற்கொடியைப்
பாருலகில் நாட்டினன் பார்.

—பாப்பு இராமநாதன், பேரையூர்.

❁

நற்றமிழ்ச்சொல் வானொலியை நச்சாகாஷ் வாணியெனும்
அற்பர்நம் கொட்டம் அடக்களண்ணுர்—விற்கொடியோன்
வீரமனைப் பேசியிங்கே வீண்காலம் போக்குமிவர்
தீரமிலார் வெட்கமிலார் தேறு.

—கி. கண்ணன், மதுரை.

❁

சொற்பழைத்த மன்னரைத் தோற்கடித்துக் கண்ணகிக்குக்
கற்சுமக்க வைத்தகதை கேளப்பா !—விற்கொடியோன்
நாவடக்கம் அற்றோர்க்கு நற்பாடம் கற்பித்த
காவியமே, 'தம்பி கதை.'

—ஆதவன் பி. இ., பம்பாய்-38.

❁

விற்புருவ மங்கையரே வெற்பனைய ஆடவரின்
நற்புகழ்சேர் வீரம் நலிந்தாலும்—விற்கொடியோன்
காலத் தமிழகத்தைக் காணுதற்கு நாமெல்லாம்
வேலெடுத்துப் பாய்வோம் விரைந்து.

—தனலட்சுமி-மீனுட்சிபுரம்.

❁

கற்புடைய கண்ணகிக்குக் கங்கைநாட் டான்தலையிற்
கற்கொண்டே பொற்கோவில் கட்டினன்—விற்கொடியோன்
பெண்ணுக்கு வைத்த பெருமதிப்பு நந்தமிழின்
மண்ணுக் கியற்கையல்ல வா !

—வே. மருதாசலம், கோவை.

❁

நற்குடிகள் வாழ்வதனில் நாட்டமிக உள்ளவனும்
பற்றலரும் போற்றுமுயர் பண்பினனும்—விற்கொடியோன்
சேரன்செங் குட்டுவனின் சீர்த்தம்பி செய்சிலம்பைப்
பாரெங்கும் பாராட்டல் பார் !

—அ. சுருளியாண்டிப் பாவலர், கோம்பை.

❁

பொற்றுரகலத்தான் போரிற் புலியனையான்
கொற்றமுடன் கோலோச்சும் கோவேந்தன்—விற்கொடியோன்
இன்றிரா வந்தென் னிதழ்கனிய இச்சென்றுன்
என்னென்பேன் தோழீ யிதை.

—பி. சுப்பையன், திருநின்றவூர்.

புற்றுவாழ் பாம்போக்கும் புல்லர் பரம்பரையே
இற்றைப்போல் அன்றே இருந்திருப்பின்—விற்கொடியோன்
வெற்றிபல பெற்று வடவோரை வென்றசெயல்
முற்றும் அறியு முலகு.

—கு. பாலசுப்பிரமணியன், அருப்புக்கோட்டை.

❁

நற்றமிழின் ஆற்றலினை நாவால் இழித்துரைத்த
அற்ப வடவர் தலைநொறுங்க—விற்கொடியோன்
கல்லைச் சுமக்கவைத்தான்; கண்ணகிக்குச் சீர்செய்தான்;
நல்லவனைப் போற்றிடுவோம் நாம.

—க. புத்தூரான், புதுப்பட்டி.

❁

கற்புநெறி மாருத கண்ணகியாள் காவியத்தை
நற்றமிழர் பண்பு நலங்காக்கும்—விற்கொடியோன்
தம்பி யிளங்கோவன் சாத்தன்முன் சாற்றிட்டான்
அம்புவிழிப் பாவாய் அறி.

—ஓ. வி. சிவலிங்கம், பொன்னேரி.

❁

"தெற்கை வடவர் தெரியாமல் அன்றொருநாள்
சொற்கத்தி கொண்டு துளைத்திடவே—விற்கொடியோன்
சேரன் வடவரது சென்னியின்மேல் கல்லேற்றிப்
பாரம் சுமக்கவைத்தான் பார் !"

—கரு. செல்லமுத்து, அரிமழம்.

❁

சொற்சோதி டன்கூற்றைத் தோற்கடித்த சீரிளங்கோ-
விற்கண்ணன்; கண்ணகிகோ விற்கண்டோன்;-விற்கொடியோன்
என்றபுகழ் பாடிடுவாய் இன்றமிழின் வெண்பாவால்
தின்றவர பிக்கடலே நீ.

—கோம்பைச்சீரான்.

❁

கற்பு நெறிதவருக் கண்ணகிதன் காதையினைப்
பொற்பு மிகுந்ததொரு பூந்தமிழால்—விற்கொடியோன்
தம்பி யுரைத்தான் தமிழும் தமிழ்க்கலையும்
தெம்போடு வாழுதெனத் தேர்

—செகதவல்லி, திருவெண்ணெய்நல்லூர்.

❁

"வெற்பதனில் விற்பொறித்து, விண்ணதனில் சங்கொலிப்ப,
வற்றா வளங்கொண்டு வந்தானே—விற்கொடியோன்,
வந்திட்ட விற்கொடியோன் வீரத்தை வான்புகழும்
செந்தமிழாற் சொல்லுஞ் சிலம்பு"

—க. செ. தக்கணமூர்த்தி, கல்யாணபுரம்.

❁

நற்றுழம் பூவை நயந்தோர்கள் பூவுலகில்
கற்றுழைப் பூவைக் கருதுவரோ ?—விற்கொடியோன்
ஆண்டதிருத் தென்னகத்தை ஆரியர்க ளாளவே
வேண்டுதியோ நீதான் விளம்பு.

—ந. இராமசாமி, சித்தையன்கோட்டை.

❁

முற்றவையில் செந்தமிழை முன்வைத்தே இப்புவியில்
பெற்றதமிழ்த் தாய்மொழியைப் பேணியதால்-விற்கொடியோன்
ஆண்டதமிழ் மண்ணில் அமைதியுற்றன், வேற்றுமையைத்
தூண்டியவர் போனர் தொலைந்து.

—சி. பி. சாமி, திருப்பத்தூர் (வ. ஆ.)

❁

மற்கொண்ட தோளால் வடநாட்டை வென்றிமயக்
கற்கொண்டு வந்தேதான் கண்ணகிக்கு—விற்கொடியோன்
மங்காச் சிலைவடித்தான் மாத்தமிழன் வீரமது
பொங்கவே என்றும் புகழ்.

—சி. காரையா, தஞ்சை.

❁

தற்குறிகள் நாடாளத் தாயகமே வாடுதடி,
பொற்கொடியே! அன்னாளில் போர்வேந்தன்–விற்கொடியோன்,
மாற்றார் அடிபணிய, மண்டலமே கொண்டாட
ஏற்ற முடியே முடி.

—கே. வி. சாமி, கீழாநிலை.

❁

"அற்பமொழி பேசி அவமதித்த அன்னியனைக்
கற்சுமக்க வைத்துக் கறைநீத்து—விற்கொடியோன்
செங்குட்டு வன்காத்த செந்தமிழே உன்பெருமை
எங்கேபோ யிற்றென் றியம்பு"

—பகவதியப்பன், நாகர்கோவில்.

❁

பொற்செல்வம் பொங்கிவரும் பொன்மலைக்குப் பேரரசன்
வற்புலத்துச் செங்கோமான் ! வன்றோளன்—விற்கொடியோன் !
தந்ததிரு வீரந்தான் தாழ்ந்ததுவோ ? என்தோழா !
எந்தையினம் காப்போம் எழு !

—முத்துதாசன், தஞ்சை.

ஆசிரியர் : கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு